ISSN 2012 - 6700

இதழ் - 22

# பூங்காவனம்

கலை இலக்கிய சமூக சஞ்சிகை



திருமதி. சுகிலா ஞானராசா

பூங்காவனம் இலக்கிய வட்டம்




317, 317A, Galle Road, Wellawatte, Colombo 06.
T : +94 11 2504470, 2500098 E : info@littleasia.lk www.littleasia.lk
73, 75A, Main Street, Colombo 11.
T : +94 11 2391592, 2391593 E : info@littleasiasilk.com www.littleasiasilk.com

# பூங்காவனம்

தோற்றம் - 2010 மே 30
இதழ் 22 - 2015 செப்டெம்பர்
ISSN 2012 - 6700


**பிரதம ஆசிரியர்**

ரிம்ஸா முஹம்மத்

**துணை ஆசிரியர்கள்**

எச்.எப். ரிஸ்னா
டப்ளியு.எம். வஸீர்

**ஆலோசகர்**

ஏ.சீ. ஜரீனா முஸ்தபா

**வங்கித் தொடர்புகளுக்கு**

Commercial Bank,
Mount Lavinia Branch,
M.F. Rimza
A/C No :- 8930020287.

என்ற இலக்கத்திற்கு காசை வைப்பிலிட்டு அதன் பற்றுச்சீட்டை அனுப்ப வேண்டும். காசுக் கட்டளையாயின் (M.F. Rimza - Dehiwala Post Office) என்று குறிப்பிட்டு அதற்கான பற்றுச் சீட்டையும் அனுப்ப வேண்டும். காசோலையாயின் குறுக்குக்கோடு இடப்படாத காசோலையை M.F. Rimza எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

| | |
|---|---|
| தனிப்பிரதி | - 100/= |
| தபால் மூலம் | - 140/= |
| வருட சந்தா | - 600/= |

**தொடர்புகளுக்கு**


"Poongavanam"
21 E, Sri Dharmapala Road,
Mount Lavinia,
Sri Lanka.

**Email:-**
poongavanam100@gmail.com

**Website:-**
www.poongavanam100.blogspot.com

**Phone:-**
0094 (0) 775009222
0094 (0) 719200580


புதிய ஆக்கங்களும், இச்சஞ்சிகை பற்றிய விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு அனுப்புபவர்கள் நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப்படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# உங்களுடன் ஒரு நிமிடம்...

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளினால் பூங்காவனம் இதழ் 22 இப்போது உங்கள் கைகளில் தவழ்கின்றது. தொடர்ந்தும் உங்களின் அனுசரணையால் பூங்காவனம் பூத்துக் குலுங்கும் என்பதில் எமக்கு நம்பிக்கையிருக்கின்றது.

உலகத் தலைவர்களில் ஒருவராகவும், இளைஞர்களின் கதாநாயனாகவும் இருந்து, மறைந்தவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள்.

"சிரமங்கள் உங்கள் வாழ்வை அழிக்க வருவதில்லை. உங்கள் சக்தியை பரிசோதிக்கவே வருகின்றன. அந்த சிரமங்கள் உங்களை நெருங்க சிரமப்படுமளவிற்கு உழையுங்கள்" என்ற அவரின் கூற்றுக்கிணங்க,

நாம் யாவரும் நமக்குக் கிடைத்துள்ள நேரத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். பிரச்சனைகளைக் கண்டு ஓடாமல் அவற்றைத் துணிவாக எதிர்நோக்க வேண்டும். ஒவ்வொரு மூச்சுக்கும் நாளை மறுமையில் இறைவனிடம் பதில் சொல்ல வேண்டும் என்பதால் நல்வழியின்பால் மனதைச் செலுத்த நம்மை நாமே திடப்படுத்த வேண்டும்.

எல்லா நாடுகளுக்கும் பொதுவாக அந்நிய செலாவணியைப் பெற்றுத் தருவதில் சுற்றுலாத் துறையின் பங்களிப்பு மிக முக்கியமானது. சுற்றுலா மூலம் மனித குலத்தை மேம்படுத்தும் வகையில், செப்டம்பர் 27 ஆம் தேதியை உலக சுற்றுலா தினமாக 1970 ஆம் ஆண்டில் ஐ.நா.சபை அங்கீகரித்து அறிவித்தது. அன்று முதல் சுற்றுலா தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. சுற்றுலாக்கள் மூலம் மனம் களிப்படைந்து உடல் புத்துயிர் பெறுகின்றது. அதே போல பிற இடங்களுக்குச் செல்லும்போது அவர்களின் பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், நடைமுறைகள் போன்றவற்றை அறியும் வாய்ப்பு கிடைக்கின்றது.

பாடசாலைகளிலும் சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்லும் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. கல்விச் சுற்றுலாக்களான இவை மாணவர்களின் பாட விடயங்களுக்கு பெரும் துணை புரிகின்றன. வாசிப்பறிவுடன் காட்சிக்குரியதாகவும் அமைந்து மனதில் இடம்பிடிக்க வழிசெய்கின்து.

அதேபோல் குடும்பத்தினர் ஒன்றிணைந்து சுற்றுலா செல்லும் வாய்ப்பும் கிடைக்கின்றது. எமக்குக் கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் நாம் நலவின் பால் மாத்திரமே மனதைச் செலுத்த வேண்டும். எனவே சுற்றுலாக்களின்போது கேளிக்கை, களியாட்டங்களில் ஈடுபடாமல் பிரயோசனமான விதத்தில் நம் நேரகாலத்தை செலவழிக்க வேண்டும்.!!!

ஆசிரியர்

# பூங்காவினுள்ளே

## நேர்காணல்

திருமதி. சுகிலா ஞானராசா
திரு. கா. தவபாலன்

## கவிதைகள்

கா. தவபாலன்
சூசை எட்வேட்
பதுளை பாஹிரா
உ. நிசார்
வெலிப்பன்னை அத்தாஸ்
குறிஞ்சி நிலா
ஏ.சீ. ஜரீனா முஸ்தபா
மருதூர் ஜமால்தீன்
பூவெலிகடை சப்ரி எம். ஷாஃபி

## சிறுகதைகள்

கினியம இக்ராம் தாஹா
தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா

## குறுங்கதைகள்

எஸ்.ஆர். பாலசந்திரன்

## உருவகக் கதைகள்

எஸ். முத்துமீரான்

## கட்டுரைகள்

கவிஞர் ஏ. இக்பால்

## நூல் மதிப்புரை

நிலாக்குயில்

## வாசகர் கடிதம்

## நூலகப்பூங்கா



# நேர்காணல்

# திருமதி. சுகிலா ஞானராசா

சந்திப்பு
ரிம்ஸா முஹம்மத்

**01. உங்கள் குடும்பப் பின்னணி, கல்லூரி வாழ்க்கை பற்றிக் கூறுங்கள்?**

என் அப்பா துரைராசா, அம்மா ஞானேஸ்வரி நாங்கள் மூன்று பெண் பிள்ளைகள் (அக்கா, நான், தங்கை) எல்லோரும் ஒரே பாடசாலையில் படித்தோம். ஒரே மாதிரி உடை, சப்பாத்து போட்டு மூவரும் அப்பா, அம்மாவுடன் வெளியில் கூட்டிச் செல்லும் அழகும் சந்தோசமும் சொல்லில் வடிக்க முடியாது. அக்கா, தங்கை முன்பள்ளி ஆசிரியையாக யாழ்ப்பாணத்தில் பயிற்சி பெற்று அங்கு கடமையாற்றினார்கள். தற்போது அக்கா அமரர். தங்கை திருமண பந்தத்தில் இணைந்து வெளிநாடு சென்றுவிட்டார். நானும் உயர்தரம் முடித்துவிட்டு வெளிநாடு செல்ல இருந்தபோது நாட்டின் சூழ்நிலை காரணமாக தொண்டராசிரியராக 1985.03.09 இல் கலைமகள் வித்தியாலயத்தில் நுழைந்தேன். அதிபராக திரு. சிவப்பிரகாசம் ஐயா (அமரர்) முதன் முதல் எவ்வாறு வகுப்பில் நுழைவது, கற்பிப்பது, வகுப்பறையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்றெல்லாம் என்னை வழிப்படுத்தினார். அன்றே ஆசிரியத் தொழிலில் எனக்கு பிடிப்பு ஏற்பட்டது. அவரையும் நன்றியுடன் நினைத்து அவர் காட்டிய வழியில் அவரது குடும்பத்தாருக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன்.




1988 இல் பரீட்சை மூலம் நாடாளவிய ரீதியில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. நானும் அதில் உள்வாங்கப்பட்டேன். கலைமகள் வித்தியாலயத்தில் சந்தோசமான பணி மனதுக்கு நிறைவைத் தந்தது. 1990 - 1991 காலப்பகுதியில் ஆசிரிய பயிற்சிக்கு சென்றபோது இனி இல்லையென்ற சந்தோசம். வீட்டு நினைவு அடிக்கடி எட்டிப் பார்க்கும். திடீரென கூறாமல் வீட்டுக்கு வந்து விடுவோம். காலச்சூழல் பிழைத்தபோது திடீரென கலாசாலை மூடப்பட்டது. நாம் திக்குமுக்காடியே



போனோம். ஆனால் ஒரு தலைவரின் கீழ் அவரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு ஒன்றிணைந்து பிரியாமல் சந்தோசமாக ஒத்துப்போவோம். முகம் கோணுவது, புறம் கூறுவது ஒன்றும் கிடையாது. அந்தக் காலம் என் அப்பா என்னை அடிக்கடி வந்து பார்ப்பார். அம்மாவின் கடிதம் கிழமைக்கு 03 க்கு குறையாமல் ஒழுக்கம், படிப்பு பற்றியே புத்தி கூறி வரும்.

மீண்டும் கலைமகள் வித்தியாலயம். திரு. என் இராஜநாதன் அதிபர். அவரிடம் ஆசிரியத் தொழில் பற்றி நிறையவே கற்றேன். எல்லாவற்றுக்கும் விளக்கம் தருவார். நிர்வாகத்திற்குள் நிறைய விடயங்களை சொல்லி வழிப்படுத்தி பொறுப்புகளைத் தருவார். அவரிடம் கற்ற விடயங்களை அனுபவத்தில் கண்டு கொண்டேன். அவரையும் அன்புடன், நன்றியுடன் நோக்குகின்றேன். தொழில் தேடல், கற்றல், கற்பித்தல் எல்லாம் என் கணவர் அதிபராக இருந்தமையினால் கற்றுக்கொண்டேன். பொறுமையே இல்லாத நான் பொறுமையை அவரிடம் இருந்தே கற்றுக்கொண்டேன். அவரும் நிறையவே வாசிப்பார். புத்தகங்களைக் காசு கொடுத்து வாங்குவார். புத்தகங்கள் எழுதுவார். இதனால் என் வாசிப்பு தேடல் நின்று போகாமல் தொடர்வதற்கு எனக்கு முழு உதவியும் ஒத்தாசையும் புரிந்தவர் என் கணவர்தான்.

தொடர்ந்து என்னை கற்க வைத்து, பட்டம் பெற வைத்ததும் அவருடைய வழிகாட்டல்தான். இன்னும் படிக்கவேண்டும் என்று வழிப் படுத்துவதும் அவர்தான். சில நேரங்களில் பாடசாலை, வீட்டு, வெளி என பல வேலைகள் இருக்கும்போதும், பிள்ளைகள் குழந்தைகளாக இருக்கும்போதும் படிக்க முடியாது என்றுகூறி மறுத்துவிடுவேன். அந்த நேரங்களில் என் கணவர் தாயாக, தந்தையாக, சேவகனாக இருந்து என்னைக் கவனிப்பார். இன்று வரைக்கும் எல்லாமே அவர் வழிப்படுத்தல்தான். இந்த இடத்தில் நான் உண்மையாகவே நன்றி உணர்வுடன் அவரை நினைத்துப் பார்க்கிறேன்.



என் தாய், தந்தை தேவையான உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கி, என் பிள்ளைகளையும் கவனித்து நான் முன்னேற வழி விட்டுத் தந்தவர்கள். இன்றுவரை அவர்களிடம் உதவிகளைப் பெற்றுக்கொண்டே இருக்கிறேன். என் தந்தை விடுமுறை எடுக்க விடமாட்டார். அவருக்கு ஏதாவது சுகயீனம்



என்றால் நான் தான் அழைத்துப் போக வேண்டும். அதனால் தனது சுகயீனத்தை வெளியில் காட்டமாட்டார். இங்கு ஒரு முக்கிய விடயம் என்னவெனில் அம்மாவின் முன்பெயரும் (ஞானேஸ்வரி) அப்பாவின் பின் பெயரும் (துரைராசா) சேர்ந்ததே என் கணவர் பெயர் ஞானராசா ஆக அமைந்திருக்கிறது. மாதா, பிதா சேர்ந்துதான் என் கணவர். இறைவன் தந்த கொடை. என் தாய், தந்தையையும் நன்றியோடு நோக்கி இறையாசியை வேண்டி நிற்கின்றேன்.

தந்தையின் தொழில் காரணமாக பல இடங்கள் சுற்றியுள்ளோம். அந்த வகையிலே மட்டக்களப்பிலே சந்திவெளி அ.த.க. பாடசாலை வீட்டிற்கு அருகில் இருந்தது. தற்காலத்து முன் பள்ளி போல் அங்கு பதிவில்லாது கல்வி ஆரம்பித்தது. அதன் பின் ஓட்டமாவடி மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்த நான் பலவாறு சுற்றி திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் என் உயர்தர பரீட்சையில் சித்தியுடன் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தேன்.

சண்முகா இந்து கல்லூரியில் கடமையாற்றிய அதிபர் செல்வி. விஸ்வலிங்கம் அம்மையார் (அமரர்) தமிழ் சார்ந்த விடயங்களை பெரியார் வழிகாட்டல்கள் போன்றவற்றை தேடிக் கற்க எம்மை வழிப்படுத்தினார். பாடசாலை நூலகத்தில் புத்தகம் இல்லை என்றேன். வேறு எங்கு நூலகம் இருக்கின்றது என்று கூறமாட்டேன்.. உன் அப்பாவிடம் கேட்டு கூறியதை தொகுத்து எடு என்று கூறினார். இந்த பழக்கம் காலப்போக்கில் நூலகத்தில் எல்லாவிதமான புத்தகங்களையும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியது. இன்று வரையும் வாசிக்காது அல்லது எழுதாது தூங்கியது கிடையாது. இன்று இந்த அளவுக்கு பதப்படுத்தி நெறிப்படுத்திய அம்மையாரை நன்றியுடன் நினைத்து அவரது ஆத்ம சாந்திக்காக வேண்டி நிற்கின்றேன்.



சிந்தாமணி ஆசிரியை எங்களுக்கு இந்து நாகரிகம் படிப்பித்தார். ஒழுக்கம், நடை, உடை, நேர்த்தி போன்ற விடயங்களை தெளிவாக நேரடியாக எமக்குக் கூறுவார்.



கல்லூரி வாழ்க்கையில் நண்பியாக இணைந்து பயணித்தவர், தொடர்ந்து கொண்டும் இருப்பவர் நாராயணசாமி சாரதாதேவி தான். கள்ளம் கபடம் இல்லாத அவரது போக்கு என்னை கவர்ந்தது. அந்தக் குடும்ப உறுப்பினரையும் நேசிக்கிறேன்.

**02. பல வருடங்களாக ஆசிரியப் பணியில் ஈடுபட்டு வரும் உங்கள் தொழில் அனுபவம் பற்றி?**

ஆம்! தரம் ஒன்றில் பல மாணவர்களுக்கு எழுத வாசிக்கத் தெரியாது. அவர்களுக்கு மா, பலாப் பழம் ஒவ்வொரு துண்டைக் கொடுத்து மடியில் வைத்து சொல்லிக்கொடுத்து எழுதப் பழக்கியதை இன்னும் மறக்க முடியவில்லை. எங்கிருந்தாலும் என்னை நினைப்பதையும், என் சுக துக்கத்தில் பங்கு கொள்வதையும், விசேட தினங்களில் வாழ்த்துத் தெரிவிப்பதையும் பழக்கமாகவும் வழக்கமாக வைத்துள்ள அவர்களில் பலர் ஆசிரியர்களாக, வைத்தியர்களாக நன்றியோடு இருக்கிறார்கள்.

தற்போதைய பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் எந்த எதிர்பார்ப்பும், விழிப்புணர்வும் ஒரு துளியேனும் இல்லை. எவ்வளவு கூறினாலும் அவர்களுக்கு உணர்வே வர மறுக்கிறது. அவர்களது வீட்டுச் சூழலும், சமூகமும் தான் இதற்குக் காரணம் என நினைக்கிறேன். சந்தோசங்களை சுமந்த நான் இப்போதுள்ள மாணவர்களை நினைத்து வேதனையுடன் இருக்கிறேன். எப்படியாவது என்னால் திருத்த முடியும் என்று நம்பிக்கை விதையை விதைத்துள்ளேன்.

**03. உங்கள் குடும்பத்தினருக்கும் இலக்கியத் துறையில் ஈடுபாடு உண்டா?**

ஆம்! அப்பா, அம்மா நன்றாக நிறையவே வாசிப்பார்கள். இன்று வரை வாசிப்பு பழக்கம் குறையவே இல்லை. கல்வி கற்கும் காலத்தில் கட்டுரைகளை அம்மா எழுதித் தருவார். பலமுறை வாசித்த பின் அதனை மீண்டும் வாங்கிக்கொண்டு வாசித்ததை யோசித்து எழுத வைப்பார். கதைகளை வாசித்தால் விமர்சிப்போம். அப்படி இருந்தால் நல்லது இப்படி இருந்தால் நல்லது என்று அப்பா சொல்லுவார்.

**04. சிறுவர் இலக்கியத் துறைக்குள் நுழைவதற்காக முதற் காரணி எது?**

எனது ஆசிரியப் பணி, பாட்டுக்களை புதுமையாக சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற அவா. மற்றது குறிப்பிட்டதொரு விடயம் பற்றி எழுதித்

தரும்படி கணவரிடம் கேட்டால் நீங்கள் எழுதுங்கள் வேண்டுமென்றால் திருத்தித் தருகிறேன் என்பார். அவர் எழுத்தாளராக, கவிஞராக இருப்பதால் எந்நேரமும் எதையாவது எழுதுவார். எழுத அமர்ந்து விட்டால் கதைக்கமாட்டார். அவர் எழுதும் நேரம் பார்த்து நானும் எழுதுவேன். பின் இருவரும் வாசித்துக் காட்ட மகள் ஸர்வினாவும், மகன் ஜனகனும் தீர்ப்பு வழங்குவார்கள். நிறைய எழுத எழுதத்தான் சொற்கள் வந்து குவியும் என கணவர் வழிப்படுத்துவார். மகளும் எழுதுவாள். மகன் நல்ல கருப்பொருள் எடுத்துத் தருவான். நான் எழுதுவதற்கு வீட்டுச் சூழலே காரணியாக அமைந்தது.

**05. சிறுவர் இலக்கியத் துறையில் நீங்கள் வெளியிட்ட நூல் பற்றி குறிப்பிடுங்கள்?**

இதுவரை சின்னச் சிட்டுக்குருவி என்ற தலைப்பில் அமைந்த நூல், கல்வி அமைச்சின் இலங்கை தேசிய நூலக அபிவிருத்தி சபையினால் 2010 ஆம் ஆண்டு சான்றிதழுக்கு உரியதாக தெரிவு செய்யப்பட்டு பாடசாலை நூலக புத்தகமாக அனுமதிக்கப்பட்டிருந்தது. அந்த நூலுக்கான வெளியீட்டு விழாவினை 2012 ஆம் ஆண்டில் செய்தேன். பொருளாதார வசதியின்மையும் வேலைப்பளுவும் தொடர்ச்சியாக நூல்களை வெளியிட இடந்தரவில்லை. ஆனால் இன்னும் எழுதிக்கொண்டே இருக்கிறேன். சின்னச் சிட்டுக்குருவி பற்றிய இரசனைக் குறிப்பை பூங்காவனம் சஞ்சிகை துணை ஆசிரியை செல்வி எச்.எப். ரிஸ்னா தினகரன் பத்திரிகையில் சிறப்பாக எழுதியிருந்தார். பின்னர் அவரால் தொகுக்கப்பட்டு புத்தகமாக்கப்பட்ட திறந்த கதவுள் தெரிந்தவை ஒரு பார்வை என்ற நூலில் 181 - 184 வரையான பக்கங்களில் இதனையும் பதிவு செய்திருந்தார். எழுத்தாளர்களை மனம் திறந்து பாராட்டி, எழுதி உற்சாகப்படுத்தும் ரிஸ்னாவினதும், ரிம்ஸாவினதும் முயற்சி போற்றத்தக்கது. எல்லாப் புகழும் இறைவனுக்கே! என்னை இலக்கிய உலகிற்கு பூங்காவனம் சஞ்சிகை மூலம் அறிமுகப்படுத்திய பெருமை மேற்கூறிய இருவரையுமே சாரும் என்பதில் மனநிறைவு பெறுகிறேன்.

**06. உங்கள் நூல் வெளியீடுகளுக்கு உதவியாக இருந்தவர்கள் பற்றிக் கூறுங்கள்?**

கேட்டவுடனே ஆம் என்று கூறி அஸ்ரா பிறின்டஸ் உரிமையாளர் திரு. எஸ். சிவபாலன் உதவி செய்தார். அந்த உதவி கிடைக்காது போயிருந்தால் நான் நூல் வெளியீடே செய்திருக்கமாட்டேன். அவர்களை ஒருபோதும் நான் மறக்க முடியாது நன்றியுடன் இருக்கிறேன். நீண்ட ஆயுளில் சுகதேகியாக வாழ வாழ்த்தி இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

**07. நூல் வெளியீட்டு முயற்சியில் நீங்கள் வெற்றி பெற்றீர்களா?**

திருகோணமலை அஸ்ரா பதிப்பகம் உரிமையாளர் திரு. எஸ் சிவபாலன் அவர்களின் எழுத்தாளர் ஊக்குவிப்புத் திட்ட அனுசரணையால் ஓரளவு வெற்றி பெற்றுள்ளேன் என்பது உண்மை. ஆயினும் முற்று முழுதாக வெற்றிபெற முடியவில்லை. அநேகமான எழுத்தாளர்களுக்கு உள்ள இன்னலும் இடையூறும் எனக்கும் உண்டு.

**08. தற்போது சிறுவர் இலக்கியத் துறைகளில் ஈடுபட்டு வருபவர்கள் பற்றிய தங்களது கணிப்பு எவ்வாறு உள்ளது?**

சிறுவர் இலக்கியம் என்ற பெயரில் சிறுவர்களுக்கு பொருத்தமில்லாத பலவற்றையும் சிறுவர்களால் புரிந்து கொள்ள முடியாதவற்றையுமே பலர் எழுதிக்கொண்டு இருக்கிறார்கள். கற்பனையில் அற்புதம் காணும் இவர்கள் உண்மையில் விழித்துக்கொள்ளாமல் உறங்கி விடுகிறார்கள். இன்றும் பேய்க் கதைகளையும் தேவலோகக் கதைகளையும் எழுதி பழமையை விட்டு வெளிவர முடியாதவர்களாக இருப்பதை அறியக் கூடியதாக உள்ளது. காலாகாலம் எழுதிவரும் விலங்குகளோடும் பறவைகளோடும் உரையாடுவதை விட்டுவிட்டு மனிதர்களோடு உறவாட வேண்டும், உரையாட வேண்டும். சிறுவர் இலக்கியத் துறையில் புதுமையும் புரட்சியும் இடம் பெற வழி ஏற்படுத்த வேண்டுமென விரும்புகின்றேன்.

**09. சிறுவர் இலக்கியம் தவிர்ந்த வேறு துறைகளில் ஈடுபடும் எண்ணம் உண்டா?**

ஆம்! கவிதை, கட்டுரை, திறனாய்வு போன்றவற்றில் ஈடுபடும் எண்ணம் இருக்கிறது.

**10. இனி வெளிவரும் உங்கள் படைப்புக்கள் எப்படி அமைய வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?**

சிறுவர்களுக்கு மட்டுமல்லாமல் இளைஞர், முதியோர் என சமூகத்தின் பல தரப்பினருக்கும் பொருந்தக்கூடிய படைப்புக்களாக இருக்க வேண்டுமென ஆக்க முயற்சிகளை முன்னெடுக்க நினைத்துள்ளேன். உதாரணமாக கவிதை, கட்டுரை, உரையாடல், கதை முதலியன எழுத எண்ணியுள்ளேன். அதற்கான காலம் கனிந்தால் என் எண்ணம் ஈடேறும்.

**11. உங்கள் ஆசிரியப் பணி அனுபவத்தில் இன்றைய மாணவர்களின் இலக்கியப் போக்கு, எழுத்துத் துறை நாட்டம் பற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்?**

இன்றைய மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் மிகக் குறைவாக உள்ளது. தமிழில் பிழையின்றி எழுத முடியாத மாணவர், கைப்பேசியினூடாக

குறுஞ் செய்தியில் தமிழை ஆங்கிலத்தில் டைப் செய்யும் திறமையை வளர்த்துள்ளனர். திரையில் படங்களுடன் வரும் சொற்களை மட்டுமே இரசிக்கின்றனர். வாசிப்பதை கேட்டல் மூலம் கிரகித்துக் கொள்கின்றனர். இது எழுத்துத் துறைக்கு சவாலாகிறது. இந்நிலை மாற்றப்பட்டு வாசிப்பு முயற்சியில் பலர் ஈடுபட வேண்டும். இதற்கு வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் தமது பங்களிப்பை சிறந்த முறையில் நல்க வேண்டுமென வினயமுடன் கேட்டு நிற்கின்றேன்.

**12. உங்களைக் கவர்ந்த பெண் எழுத்தாளர்கள் யாவர்?**

திருமதி மனோன் மணி சண்முகதாஸ், திருமதி. சித்திரலேகா மௌனகுரு, வெலிகம ரிம்ஸா முஹம்மத், வசந்தி தயாபரன் போன்ற இவர்கள் அனைவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். இன்றும் இலக்கிய முயற்சிகளில் முனைப்புடன் செயல்பட்டுக்கொண்டிருப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நாம் இலங்கையர், இலங்கை எழுத்தாளர்களை நேசிப்போம்.

**13. தற்கால ஆசிரியர்களிடையே இலக்கிய ஆர்வம் எந்த அளவில் உள்ளது?**

இளம் ஆசிரியர்கள் இலக்கியத்திலும், விளையாட்டிலும் ஆர்வமுடன் உள்ளனர். அதனை வளத்தெடுக்க அவர்களே முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நேரம் இல்லை என்பது பொய். நாங்கள் தான் நேரத்தை ஒதுக்க வேண்டும். தேடலை மேம்படுத்த வேண்டும். பொருளாதார நிலை கடினமாக இருக்கும். அதற்காக ஆர்வத்தினை கைவிடக்கூடாது. திறமைக்கு முன்னுரிமை இல்லாது போகலாம். திறமையில்லாதது முன்னுக்கு வரலாம். சற்று கவலை, மனச்சோர்வு வரத்தான் செய்யும். அதனை மறந்து பயணித்தால் என்றோ ஒரு நாள் வெல்லுவோம், உயர்வோம் என்பதில் ஒரு துளியேனும் எனக்கு ஐயமில்லை. இதையே எல்லோரும் சிந்தித்தால் வெற்றி நிச்சயம்.

**14. இந்த நேர்காணல் மூலம் வாசகர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

ஒன்றை பல தடவை வாசியுங்கள், நல்ல கருத்துக்களை சிந்தியுங்கள், நல்ல விடயங்களை மனதில் பதியுங்கள். சரி பிழைகளை நீங்களே நீதிபதியாக இருந்து தீர்ப்பினை எடுங்கள். மனசாட்சிக்கு விரோதமில்லாது வாழப் பழகுங்கள். ஏனெனில் மனிதனாகப் பிறந்துவிட்டோம். நாம்தான் நமது வாழ்க்கையை சோலையாக்க வேண்டும். கவலை வரும், நோய்கள் வரும். இவற்றிலிருந்து விடுபட நிறைய வாசியுங்கள். நிறைய எழுதுங்கள். தீர்ப்பு உங்கள் மனமே பேசட்டும். இறைவனை நினைத்து என்னால் முடியும் என்ற நம்பிக்கை விதையை விதையுங்கள்!!!

# மொறட்டுவ கா. தவபாலன் கவிதைகள்

## மக்களின் ஏக்கம் தீரவில்லை

சூறாவளி அடிக்கின்றது
பெருமழை பெய்கின்றது
மின்னல் வெட்டுகின்றது
இடி இடிக்கின்றது.

மரங்கள் வேருடன் சாய்கின்றன
வீடுகள் உடைந்து விழுகின்றன
மக்கள் பயத்தால்
குளறுகின்றார்கள்
ஏனோ இன்னமும் விடியவுமில்லை.

சூறாவளி ஓயாதா?
பெருமழை நிற்காதா?
பொழுது விடியாதா? என்று
மக்கள் ஏங்கித் தவிக்கின்றார்கள.

சேவல்களும் குயில்களும்
கூவ மறுக்கின்றன..
சூரியன் உதிக்க மறுக்கின்றான்
அதனால் இன்னும் விடியவில்லை.

சூறாவளி ஓயவில்லை
பெருமழை நிற்கவில்லை
விடியல் இன்னும் வரவில்லை
மக்களின் ஏக்கம் தீரவில்லை!!!

## வீதிகளில் விசர் நாய்கள்

வீதிகளில்
விசர் நாய்களின் ஆதிக்கம்
கொடி கட்டிப் பறக்கின்றது!

அவை நாக்கைத்
தொங்கப் போட்டபடி
அங்குமிங்குமாக
அலைந்து திரிகின்றன!

அவை பெண்களை மட்டுமே
தேடித் தேடிக் கடிப்பதால்
பெண்களால்
வீதிகளில்
சுதந்திரமாக
நடமாட முடியவில்லை!

பெண்களைப் பாதுகாக்க
உள்ள ஒரே வழி
விசர் நாய்களைகச்
சுட்டுக்கொன்று
அழித்து விடுவதேயாகும்!!!

# தீர்வு

சிறுகதை

● கினியம இக்ராம் தாஹா

பௌர்ணமி நிலவின் அழகை இரசித்தபடி ஊரே அமைதியாய் தூங்கிக் கொண்டிருந்தது. ஆனால் ஊரின் கடைசித் தெருவில் அமைந்திருந்த ஓலைக் குடிசையில் மட்டும் ஓர் குழந்தையின் அழுகுரல் கேட்டுக்கொண்டிருந்தது.

"பிள்ள விடாம அழுவுது என்ன செய்ற?"

"பிள்ளைக்கு பால் போதா.. இன்னிக்கு டொக்டர் சொன்னாரு தானே, எங்கிட்ட அதிகம் பால் சுரக்குதில்லன்னு..."

"அப்போ பெட்டிப்பால் தான் கொடுக்கணும்!"

"ம்.. கையில் எவ்வளவு சரி இருந்தா போய் வாங்கிட்டு வாங்க!"

ரமணிக்கு வயது பதினெட்டு, சிவா அவளைவிட ஒரு வருடம் மூத்தவன். இருவரும் ஒரே பாடசாலையில் படித்தவர்கள். படிக்கும் போது மலர்ந்த காதல். இரு வீட்டாரின் கடும் எதிர்ப்பு! அதனால் இருவரும் யாருக்கும் தெரியாமல், அவர்கள் வாழ்விலே அறியாத தூரப் பகுதிக்குச் சென்று திருமணம் முடித்து வாழ்கின்றனர். இரு வீட்டாரும் அவமானத்தால் இருவரையும் மறந்துவிட்டனர்.

இளம் வயதுக் காதல் - வாழ்வின் சிக்கல்களை சிந்திக்கவில்லை. சிவா கூலி வேலை செய்து ரமணியை சந்தோசமாகப் பார்த்துக் கொண்டான். ரமணி, வீட்டால் வரும்போது சுருட்டி வந்த நகைகளை விற்று, சிறு காணியை வாங்கி குடிசையொன்றை அமைத்துக் கொண்டனர். கூலி வேலை - குடிசை வீடு - சிறிய சம்பளம் என்றாலும் காதலர்களின் வாழ்க்கை சந்தோசமாக கழிந்து கொண்டிருந்தது.

நாட்களின் நகர்வில் ரமணி பெண் குழந்தைக்குத் தாயானாள். நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு இவர்களைத் திக்குமுக்காட வைத்தது. வேலையும் முன்னரைப் போல எந்த நாளும் கிடைப்பதில்லை. அதனால் சரியாக சாப்பிடவும் முடியவில்லை. பட்டினி நிலை. ரமணியின் உடம்பில் விட்டமின் குறைபாட்டால் குழந்தைக்கு தாய்ப்பால் சுரக்கவில்லை. புட்டிப்பால் கொடுக்க மிகவும் கஷ்டப்பட்டனர்.

கையில் பணமில்லை. வீடு வேறு மழை பெய்தால் தண்ணீரால் நிறைந்து விடும். இருவரும் செய்வதறியாது தத்தளித்தனர்.

"ரமணி நான் வெளிநாடு போகவா?"

சிவா தன் காதல் மனைவியைப் பார்த்துக் கேட்டான்.

"....?"

அவனின் எதிர்பாராத கேள்வியால் என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் ஆயிரம் கேள்விகளுடன் மௌனமாக அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன பேசாம இருக்கிறீங்க?"

"ம்.. எப்படி உங்கள பிரிந்து தனியா இருப்பேன். எனக்கு ஒன்னுமே விளங்குதில்ல.."

"எனக்கும் உங்களப் பிரிந்து இருக்கிறது கஷ்டம்தான். இருந்தாலும் ஒரு நாள் வாழ்க்கைச் செலவுக்கே எவ்வளவு திண்டாடுறோம். அதனால்தான்......!!"

"ஹும்.. அதுவும் உண்மைதான். ஆனா நீங்க போறதென்டா இரண்டு - மூனு லட்சம் காசு கட்ட வேண்டி வருமே?"

"என்ன செய்ய யார் யார் கிட்ட சரி கடன் கேட்டுப் பார்க்கிறன்"

இரண்டு கிழமைகள் கழிந்தன. சிவாவினால் யாரிடமிருந்தும் கடன் பெற்றுக்கொள்ள முடியவில்லை. தங்கியிருக்கும் ஊரில் அறிமுகமில்லாதவர்கள். எவரும் கடன் கொடுக்க முன்வரவில்லை. குடும்பத்தாரிடமும் கடன் பெற்றுக் கொள்ள முடியவில்லை. எல்லோரும் காதல் கல்யாணக் கோபத்தை இன்னும் மறக்கவில்லை.

"நான் ஹவுஸ்மெயிட்டா போனா செலவு இல்ல தானே?" சோகமாய் இருந்த கணவன் சிவாவைப் பார்த்து ரமணி கேட்டாள்.

"ஆமா. எங்களுக்கு ஒரு செலவும் இல்ல. அதோட கையில் டிக்கட் எல்லாம் கிடைக்கும்.. ஆனா... உங்களால முடியுமா?"

"என்ன செய்ய சிவா! கஷ்டம் கஷ்டம்னு எந்த நாளும் அழவா முடியும்? இந்த குட்டிய காப்பாத்தணும். நல்லா படிக்க வைக்கணும். பெரிசா ஒன்னும் தேவயில்ல. சின்ன வீடும் உங்களுக்கு ஒரு தொழிலும் ஏற்பாடு பண்ணிக் கொண்டா போதும்.."

"பிரிவ நெனச்சா கஷ்டம்தான்.."

"ஒன்னும் யோசிக்க வேணாம். நீங்க நான் போறதற்கான ஏற்பாடு பண்ணுங்க.."

"ம்.. சரி நான் இந்த ஊர் சப் ஏஜென்ட்காரர் கிட்ட விபரம் கேக்கிறன்"

அன்று இரவே சிவா சப் ஏஜென்ட் காரரை சந்தித்து விபரம் கேட்டான்.

"ஒன்னுக்கும் கவலைப்படாத சிவா தம்பி.. ஒரு கிழமையில் உன் பொண்டாட்டி பறந்திடுவா! நான் எல்லாம் செஞ்சு தாரன்..."

"அண்ணே.. ஒரு நல்ல இடமா பாருங்க.."

"இப்போ சவூதியில ஒரு நல்ல இடம் இருக்கு. ஆனா முஸ்லிம் ஹவுஸ்மெயிட் மட்டும் தான் கேக்குறாங்க. தங்கமான இடம். நல்ல மனுசர். அந்த இடத்திற்கு போவ உங்க பொண்டாட்டி கொடுத்து வைக்கணும்"

சப் ஏஜென்ட் காரர் சவூதி போய் இடத்தைப் பார்த்து வந்தது போல் சொன்னார்.

"ச்ச... அங்க ரமணிக்கு போக ஏலாதே...?"

"என்ன சிவா.. நான் இருக்கேன் இல்ல. அதெல்லாம் சிம்பல். ரமணியின் பெயர மாற்றி முஸ்லிம் பெயரில் பாஸ்போர்ட் எடுப்பம்."

"அதெல்லாம் தப்பு இல்லயா? அதுக்கும் காசு வேணும் தானே..?"

"ஐயோ இதெல்லாம் வாழ்க்கையில சகஜம்டா தம்பி! மெடிக்கல் பாஸ்போர்ட் செலவு எல்லாம் நான் பாக்கிறன. ம்.. கொஞ்சம் செலவாகும். உன் கையில இருந்தா.. நீ பார்த்து எனக்கு எவ்வளவு சரி தா. நீயும் கஷ்டத்தில உள்ளவன் தானே.. இல்லன்னா.. பிறகு தா. ரமணி போய் ஒரு மாசம் போனதும் மாசா மாசம் கையில் பணம் கொட்டும். அப்புறம் வெள்ளக்கார துரை தான்"

ஏஜென்ட் காரர் தேவைக்கேற்றவாறு நல்லா கதைத்தார். சிக்கல்கள் சீராக வேண்டும் என்பதால் ரமணியும் இந்த ஆலோசனைக்கு உடன்பட்டாள். மறுநாள் அதிகாலையில் சப் ஏஜென்டுடன் சிவாவும் ரமணியும் எதிர்காலக் கனவுகளுடன் கொழும்பு சென்றனர்.

சிவா குழந்தையுடன் வெளியே நின்று கொண்டிருந்தான். சப் ஏஜென்ட் ரமணியை கூட்டிக் கொண்டு ஏஜென்ட் உள்ளே சென்றார். ஏஜென்ட் வழமை

போல் மும்முரமாக இயங்கிக்கொண்டிருந்தது. ரமணியை ஒரு இடத்தில் அமரவைத்து விட்டு, சப் ஏஜென்ட் பைல்களுடன் அங்குமிங்கும் ஓடி ஓடி அலுவலக அதிகாரிகளுடன் ஏதோதோ கதைத்து விட்டு மீண்டும் ரமணியிடம் ஓடி வந்தார்.

“தங்கச்சி.. எல்லாம் பேசியாச்சு. இப்போ உங்கள கூப்பிடுவாங்க. ஓகே” என்று சொல்வதற்குள், ஓர் அலுவலக பெண்மணி,

‘ஒயா என்ட” என்று ரமணியை அழைத்தாள்.

ரமணி அதிகாரியின் அலுவலகத்திற்குள் சப் ஏஜென்ட்டுடன் உள்ளே நுழைந்தாள். அங்கே ரமணியிடம் விபரங்கள் கேட்டு விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்பட்டன. முஸ்லிம் பெயரில் பாஸ்போர்ட் எடுப்பதற்கும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. அப்போது, அந்த முகவர் நிலையத்தின் பொறுப்பு அதிகாரி ஹலீம் அங்கே வந்தார்.

“சேர் இப்பவா வர்றீங்க?”

“ஓ யெஸ்!! மிஸ்டர் லாபிர்! அந்த டுபாய் இன்டர்வியு விசயங்கள மிஸ் மாலாவோட பாருங்க..!” என்றவாறு திரும்பி செல்வதற்குள்,

“சேர்.. சொகமா ஈக்கிறீங்களா?” அதிகாரியை அன்புடன் விசாரித்தார் சப் ஏஜென்ட்காரர்..

“ஓ நஸீம். என்ன விசயம்.. ம்?”

“இந்த பொண்ணு கஷ்டத்தில் இருக்கா.. அதான் சவூதி போக வந்திருக்கா..”

“இட்ஸ் ஓகே.. டொகியுமென்ட் எல்லாம் ஓகே தானே..”

“அது வந்து...” சப் விசயத்தை சொல்லிக்கொள்ள முடியாமல் தடமாறினார்,

“என்ன நஸீம்..? மிஸ்டர் லாபிர் பிளீஸ் கிவ் மீ டொக்கியுமென்ட்”

ஆவணங்களைக் கையில் எடுத்தவர்,

“மை கார்ட்.... வட் ஈஸ் திஸ்... வெரி யங்.. அதோட நேம் சேஞ்.. மிஸ்டர் லாபிர் எத்தன தடவ சொல்லியிருக்கேன்.. டோன்ட் டு லைக் திஸ்..! ஐ ஹேட் லைக் திஸ் வேர்க்” கோபத்துடன் கத்தியவாறு ஆவணங்களை தூக்கி எறிந்தார். ரமணி பயத்தாள். நடுங்கியவாறு எழும்பி நின்றாள்.

“சிஸ்டர் நீங்க மட்டுமா வந்தீங்க..?”

"இ.. இல்ல.. அவரும்தான்.."

"கோல் ஹிம்"

சப் ஓடோடிச் சென்று வெளியில் நின்ற சிவாவைக் கூட்டி வந்தார். குழந்தை அழுது கொண்டிருந்தது. அதை சமாளித்தவாறு அதிகாரியின் முன் நின்றான் சிவா.

"தம்பி.. உங்களால கொஞ்ச நேரமே பிள்ளய பார்த்துக்கொள்ள முடியல்ல.. எப்படி பச்சக் குழந்தய விட்டுட்டு இவவ சவூதி அனுப்ப போறீங்க.. ம்.."

சிவா நிதானமாக தன் கஷ்ட நிலையை எடுத்துச் சொன்னான். அதை கேட்ட அதிகாரி,

"ஓகே தம்பி உங்க நிலமை எனக்கு விளங்குது. பெயர மாத்தி.. வயச மாத்தி பொய் சொல்லி அனுப்ப நான் விரும்ப இல்ல. அதோடா பால் குடிக்கிற குழந்தய பிரிச்சு நான் பாவத்த தேட விரும்ப இல்ல. நாம ஒரு ரிசானாவ இழந்திட்டோம்.. இனியும் ரிசானாக்கள இழக்கக் கூடாது... தவறு நடந்த பின் அறிக்கை கொடுத்தும்.. அன்பளிப்புக் கொடுத்தும் பிரயோசனம் இல்ல. நாம் ஏஜென்ட் எல்லோருக்கும் அட்வைஸ் பண்ணியிருக்கேன். பட் எனக்கு தெரியாம செய்றாங்க.. ஐ டோன்ட் லைக் திஸ் பிவுபள்...

எல்லோரும் கஷ்டத்திற்குத்தான் வெளிநாடு போறாங்க. அதுக்காக கள்ள முறைல போக வேண்டிய அவசியம் இல்ல. ரிசானாவுக்கு நடந்த நிகழ்வு இனி யாருக்கும் நடக்கக் கூடாது...

தம்பி.. ஏன்ட ஏஜென்ட்ல சிங்கள.. தமிழ்.. முஸ்லிம் எல்லோரும் வேலை செய்றாங்க.. அதேபோல வெளிநாடும் போறாங்க.. யாராக இருந்தாலும் மனுசங்களே..!

ஒன்னும் கவலைப்பட வேணாம்.. தம்பி உங்களுக்கு நல்ல கம்பனி ஒன்னுல வேல வாங்கித்தாரன்.. இல்ல வெளிநாடு போகனும்னா உங்கள நல்ல தொழிலுக்கு அனுப்புறன்.. உங்க கையில கட்டுறதுக்கு இப்போ காசு இல்ல.. எனக்குத் தெரியும்.. இட்ஸ் ஓகே.. நீங்க கொஞ்சம் கொஞ்சமா தாங்க. இதுதான் என்னால செய்ய முடியுமான ஹெல்ப். ஓகே..!!"

ரமணியும் சிவாவும் நன்றியுணர்வுடன் அவரைப் பார்க்க - சப் நஸீமும், லாபிரும் குற்ற உணர்வுடன் தலையைக் குனிந்து கொண்டனர்!!!

(முற்றும்)

# கருத்துச் சாரங்கள்

மனவழுக்கு நீங்காதவனுக்கு அருள்ஒளி கிடைக்காது
கன பிரார்த்தனையும் பலிக்க மாட்டாது!

எட்டு மணிநேரம் சாப்பிடவோ காதலிக்கவோ முடியாது
எட்டு மணிகள் வேலை செய்ய முடியும்!

தகுதி இல்லாவிடினும் மதிப்பு மரியாதையை
மிகுதியாய் எதிர்பார்க்கிறான் முட்டாளும்!

வல்ல திறமை குடியிருக்கும் இடத்தேதான்
நல்ல குணங்களும் குடியிருக்கும்!

முண்டியடித்து முன்னேற வேண்டிய அவசியம் இல்லை
திண்ணமான திறமையுடையார் தமக்கே!

நல்லவனென்று பேரெடுக்க பிரியப்படுகிறார் யாவரும்
நல்லவனாய் வாழ முயலார் யாரும்!

சொன்னது சரியென வாதாடுவதல்ல அறிவு
உண்மையை தேடிக் காண்பதே அறிவு!

இன்பம் என்பது துன்பத்தின் தொடக்க விழா
துன்பத்தின் சரிகை கரை!

● சூசை எட்வேட்

**வாசகர் கவனத்திற்கு**

தாங்கள் அனுப்பும் படைப்புக்களை தட்டச்சு செய்து மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பின், பூங்காவனம் விரைவாக வெளிவர அது பேருதவியாயிருக்கும். ஆதலால் தயவுசெய்து மின்னஞ்சல் செய்ய முடியுமானவர்கள் இதை கருத்தில் கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

# இலக்கிய அனுபவ அலசல் 17

கவிஞர். ஏ. இக்பால்

பாடகர் நாகூர் ஹனீபா, ஜெயகாந்தன், Z.L.M. முஹம்மத் என்னைக் கவர்ந்தவர்கள். அதில்,

## பாடகர் நாகூர் ஹனிபா பற்றிய தகவல்கள்

பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் மாணவர்களும், பாடசாலையில் உயர்கல்வி வகுப்புகளில் கற்கும் மாணவர்களும் என்னை அடிக்கடி பாட விடயங்கள் சம்பந்தமாகச் சந்திப்பார்கள். ஓய்வு பெற்று வீட்டிலிருக்கும் என்னிடம் ஆய்வுக்கான நூல்கள் பெறுவதும், ஆய்வுக்கான கருத்தறிவதுமே என்னைச் சந்திப்பதின் முக்கிய நோக்கமெனலாம்.

நான் முன்பெல்லாம் கற்பித்த மாணவர்களுக்கும், இன்றைய மாணவர்களுக்குமிடையே வித்தியாசங்கள் அதிகம். இயல்பூக்க வளர்ச்சியில் முன்பெல்லாம் பிறந்ததிலிருந்து கேட்டல், அதன்பின் கதைத்தல், அதன்பின் எழுதுதல், அதன்பின் வாசித்தல் எனும் வளர்ச்சியில் செல்வர். இன்றைய நிலை அப்படியல்ல. கேட்டல், கதைத்தல், பார்த்தலில் நின்றுவிடுவார்கள். காரணம்: தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி இன்றதிகம். தொழில் நுட்பம், பார்த்தலில் அவர்களை நிறுத்தியதால், எழுதுதல், வாசித்தல் இன்று மாணவரிடையே மிகக் குறைவெனலாம்.

இதற்கான மடைமாற்றமென்ன? என்பதில் அதிக சிந்தனைக்குட்பட்ட நான், என்னிடம் வரும் மாணவர்களிடம், 'இலக்கிய விடயங்கள் சம்பந்தமாக தற்காலம் நீங்கள் வாசித்த தலைப்புடன் என்னை சந்தியுங்கள்' என்றேன்.

2009 செப்டம்பர் 27 ஆந் திகதியத் தினகரன், ஒக்டோபர் 16 ஆந் திகதியத் தினகரன், டிசம்பர் 20 ஆந் திகதியத் தினகரன் வாரமஞ்சரிகளுடன் வந்து கூடினார்கள்.

மாணவர்கள் அப்பத்திரிகைகளில் கவர்ந்த விடயம்: நாகூர் ஹனிபா பற்றிய கட்டுரைகள் மூன்று விதங்களாக பிரசுரமானவைதான். அவர்களில் சிலர் 'இக்கட்டுரைகள் ஏட்டிக்குப் போட்டியானது' என்றனர். சிலர் 'நாகூர் ஹனிபாவின் கலைத் திறமையை முதலாவது கட்டுரை காட்டுகின்றது. இரண்டாவது கட்டுரை, அவர் பாடிய பாடல்களின் இலக்கிய அந்தஸ்தையும், இலக்கிய கர்த்தாக்களையும் எடுத்தோதுகிறது. மூன்றாவது கட்டுரை விடயமறியாத ஒருவர் குழம்புவதாக இருக்கின்றது' என்று கூறினார்கள். நான் மிக மகிழ்ந்தேன். ஒன்று: தேடி வாசித்தமை, இரண்டு: வாசிப்பதற்குரிய

அவர்களுக்கேற்றதைக் கண்டு பிடித்தமை, மூன்று: தாரதம்மியத்தை அறிந்துணர்ந்தமை.

இத்தனை விடயங்களைக் கூறிய மாணவர்கள் என்னைச் சும்மா விடவில்லை. 'பாடிய கலைஞன் பாட்டுக்குரிய கலை இலக்கியவாதி, இவற்றின் தாரதம்மியம் என்பவற்றை விரிவாக உதாரணங்களுடன் எங்களுக்கு விளக்க வேண்டும்' என்றனர். 'அதை எனக்கு உடனடி செய்ய முடியாது. அடுத்த சந்திப்பில் பார்ப்போம்' என்று கலைந்துவிட்டோம்.

அடுத்த சந்திப்பில் என்னை அவர்கள் விடவில்லை. அவர்களுக்கு விரும்பக் கூடியதாக ஒரு கதை சொன்னேன். கலை இலக்கிய நேசர்கள் கூடிய ஒரு கூட்டத்தில் தலைமை வகித்தவர் கேட்டார். 'சபையோர்களே! யாராவது ஒருவரது வாழ்க்கையில் ஒரே நேரத்தில் தாங்க முடியாத பெரு மகிழ்ச்சியும், தாங்க முடியாத பெருந் துன்பமும் ஏற்பட்டதுண்டா? அவ்விதம் நிகழ்ந்தவர் கையை உயர்த்துங்கள்' என்றார். ஒரேயொருவர் கையை உயர்த்தினார். அதைக் கூறுமாறு சபை அவரிடம் பணித்தது.

"அழகிய ஆற்றின் நீர்க் கரையில்தான் எனது வீடு அமைந்துள்ளது. அன்று அந்தி வேளை வீட்டின் முன்னே நீக்கரையை அடுத்து ஒரு கதிரையில் அமர்ந்து இயற்கையை இரசித்துக் கொண்டிருந்தேன். எனது மெய் சிலிர்க்கக் கூடிய விதத்தில் அழகிய இசையொன்றெழுந்தது. மிகவும் இன்புற்றேன். அப்பாடல் எனது தாய் நாட்டின் தேசிய கீதம். அதனால் இன்னும் மகிழ்ந்தேன். இன்னும் தாங்க முடியாத மகிழ்ச்சி. அப்பாடல் நானியற்றிய பாடல். அப்படியே கேட்டு மகிழ்ந்து இன்புற்றிருந்தேன். திடீரென இசை நின்றுவிட்டது. உடனே எழுந்து வீடு திரும்பினேன். வீட்டிலுள்ள பொருள்கள் யாவும் சூறையாடப்பட்டுள்ளன. தாங்க முடியாத மகிழ்ச்சியில் இருந்த நான், தாங்க முடியாத துக்கத்திலாழ்ந்தேன்."

முதலாவது, கலையைக் கள்வர்கள் புகுத்தியுள்ளார்கள். அடுத்து இலக்கியத்தைக் கலையுடன் சேர்த்துள்ளார்கள். இலக்கியவாதி அப்படியே அதிர்ந்து போனான். நாகூர் ஹனிபா பற்றி 2009 செப்டம்பர் 27 ந் திகதியக் கட்டுரை, ஒரு கலைஞனின் திறமையை அப்படியே வெளியே காட்டும் விளக்கக் கட்டுரை.

நாகூர் ஹனிபா தி.மு.க. சார்பான ஒருவர். அண்ணாத்துரை, தேர்தல் கூட்டங்களுக்கு ஹனிபாவையும் கூட்டிச் செல்வார். ஒருமுறை ஒரு ஆற்றைத் தோணியில் கடந்து செல்லும்போது, கூட்டத்துக்குரிய நேரம் பிந்திவிட்டது. நாகூர் ஹனிபாவைப் பாடும்படி அண்ணா கூறியிருக்கிறார். பாடலின் ஓசையின் உயர்ந்த 'ஸ்தாயி' கரை கடந்து கூடியிருந்த கூட்டத்தைக் கலக்கியுள்ளது. கூட்டத்துக்கு வந்தவர்கள் ஆற்றங்கரைக்கு அள்ளுண்டு வந்துவிட்டனர். அண்ணா அங்கே கூட்டத்தை நடத்திவிட்டுத் திரும்பினார்.

திரைப்படங்களில் தொடர்ந்து பாடக் கிடைக்காததினால் தனிப்பாடல்களை இஸ்லாமிய கீதமாக ஹனிபா இசைக்கத் தொடங்கினார். இசையை அவரும் அமைத்தார். இசையமைப்பாளர்களும் செய்தனர். அவரது வளர்ச்சிக் காலத்தில் கல்வியதிகாரி ஜவாத் மரைக்கார், புத்தளப் பகுதியில் ஒரு

கிராமத்துக்குச் சென்றுள்ளார். பாடசாலையைத் தரிசித்த பின், தொழுகைக்காக ஒரு பள்ளிவாசலுக்குச் சென்றுள்ளார். அங்கே, நாகூர் ஹனிபா பாடல் பற்றி கதை எழும்பியுள்ளது. அங்கிருந்த முஅத்தின் "நாகூர் ஹனிபாவா? அவரொரு அவுலியா - இறை நேசரல்லவா?" என வியந்தாராம். இந்த வியப்புக்குக் காரணம் இஸ்லாம் தோய்ந்த அவர் பாடிய பாடல்கள்தான்.

இலக்கியம் தோய்ந்த இஸ்லாமியப் பாடல்கள் அந்த கலைஞனை எந்த உயரத்திற்கு எழுப்பியுள்ளது என்பதை இங்கே அறியலாம்.

பல்கலைக்கழக மாணவி ஒருத்தி, 'நாகூர் ஹனிபா பாடல்கள்' எனச் செய்த ஒரு ஆய்வில், அப்பாடல்களை நாகூர் ஹனிபாவே இயற்றியுள்ளதாக எழுதியுள்ளார். இச்செய்தியையும் கல்வி அதிகாரி ஜவாத் மரைக்காரே சொன்னார்.

இவ்விதம் தடுமாற்றம் வரக் கூடாதென்பதைத் தெளிவுபடுத்தும் கட்டுரைதான் 2009 ஒக்டோபர் 16 ஆந் திகதி வெளிவந்த கட்டுரை எனலாம். இக்கட்டுரையை மானா மக்கீன் எழுதியிருக்கிறார். இவர் நாடறிந்த 'பத்தி' எழுத்தாளர். அநுபவமிக்க ஆக்க எழுத்தாளர். இருபத்தைந்து நூல்களை அநாயாசமாக எழுதித் தள்ளியிருக்கிறார். அவரது எழுத்து உத்தி முறைத் தனியாக ஆய்வு செய்ய வேண்டிய முக்கியமுடையது. டிசம்பர் 20 ஆந் திகதி வெளியான கட்டுரையை எழுதியவருக்கு கலையும் தெரியாது. இலக்கியமும் தெரியாது என முடிவெடுக்கலாம்.

திரை இசைக்கு அதிக பாடல்களை எழுதிய வாலி, எம்.எஸ். சுப்பையா நாயுடு தொடங்கி ஏ.ஆர். ரஹ்மான் வரை பல்வேறு இசையமைப்பாளருக்கு பாட்டெழுதியவர். அவரது பாடல்களை கலை உலகமும், இலக்கிய உலகமும் வியந்து போற்றுகின்றது.

இளையராஜா தானே பாட்டெழுதி இசையமைத்துப் பாடி, கலை இலக்கியத்துள் இணைந்தவர். கண்ணதாசன் தான் இயற்றிய பாடல்களை மூன்று தொகுதிகளாக வெளியாக்கியுள்ளார். 1502 பாடல்கள் அவற்றுளடங்கும். வைரமுத்து இரண்டு தொகுதிகளில் 404 பாடல்களை வெளியாக்கியுள்ளார். பட்டுக்கோட்டையும் இந்தளவு பாடல்களை எழுதியுள்ளார். இவர்களது பாடல்களைப் பாடும், பாடிய கலைஞர்கள் மறைந்தாலும் இவர்களும், இப்பாடல்களும் நிலைத்து நிற்கும். இவ்வித நிலை நிறுத்தலை ஏற்படுத்தும் கட்டுரைதான் மானா மக்கீனின் கட்டுரை எனலாம்.

ஒரு சினிமாப் பாட்டின் வெற்றிக்கு 01. பாடல், 02. பாடலைப் பாடியவர், 03. இசை அமைத்தவர், 04. படமெடுத்த இயக்குனர் காரணம் என்பது கலை இலக்கியவாதிகளின் கருத்து.

இவற்றையெல்லாம் மையமாக எடுத்து இன்னும் ஆய்வு செய்து இக்கட்டுரைகளை நோக்குங்கள் எனக் கூடிக் கலைந்தோம்!!!

(இன்னும் தொடரும்)

# நாடோடியின் நாட்குறிப்பு

வண்ணமான வாழ்க்கையின் வரைவிலக்கணம்
வலம் வருதல் என்பதான கோட்பாட்டிலே
எம்மைச் சுமக்கும் பூமியே உரிமையாக நடக்கிறோம்!

இடைவிடாத இடப்பெயர்வுகள் என்பதால்
பாரம்பரியத்தின் வழக்குகள் பராமரிக்கப்படுகிறது!

நிரந்தரமற்ற வாழ்க்கைப் பயணத்திலும்
நினைவுகளை விட்டகலாத அநுபவங்கள்!

நிஜங்களை யாசிக்கும் உள்ளங்களுக்கு
நிதர்சனமான மனிதாபிமானத்தின் தடங்களை
பதிவு செய்கிறோம்!

காணி பூமிக்காக போராடி வாழ்க்கை கழிகிறது சிலருக்கு!
மலையடிவாரங்களிலும் நதியோரங்களிலும்
உல்லாசமாக வசந்த பாடலிசைக்கிறது எமக்கு!

மனவுணர்வுகளில் இன உறவுகளின் நெருக்கம் இதமாக!
பயணங்கள் முடிவதில்லை கால்களுக்கு!

சுழலும் பூமியின் பௌதிக மாற்றங்களையும்
இயற்கையின் அழகையும் இரசித்து
இரசனை மொழியெழுதும் மனத்தூரிகை!

மன விவேகத்தை அதிகரிக்கும் உலக விசித்திரங்களோடு
மண்ணில் மாறுபட்ட அறிமுகங்களும்
அன்னியோன்ய இணக்கப்பாடுகளும்!

மனுக்குலம் ஏந்தி நிற்கும் சீரிய இயல்பூக்கம் இசைவாக்கங்களோடு
அனுசரித்து போகும் மனபலம் இனநலம் பேணி
சமத்துவ வெளியிலே உறவாட வைக்கிறது!!!

● பதுளை பாஹிரா

# கிளை இழந்த விருட்சங்கள்

சிறுகதை

● தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா

அன்று காலைப்பொழுது மிக ரம்மியமாக விடிந்தது. ஆகாயப் பட்சிகள் எந்தவித சலனமும் இன்றி தமது அன்றாட உணவுக்காக கூட்டத்தோடு பறந்து சென்றுகொண்டிருந்தன. ஒரு ஜீவன் மட்டும் தனியாக அழுதுகொண்டிருந்தது. தன் வாழ்வின் கடைசிப் பக்கங்கள் கரையான் அரித்துவிட்டதாய் தோன்றியது அவளுக்கு. இந்த உலகம் விசாலமானது. அதில் மனிதர்கள் தமக்குத் தேவையான அனைத்தையும் தேடிப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனாலுமென்ன? ஒரு சில கனவுகள், கனவுகளாகவே இருந்துவிடும் சூழ்நிலைகளும் வாய்த்துவிடுகின்றன. அன்புக்காக ஏங்கிய சில ஜீவன்கள் அந்த அன்பு கிடைக்காமையினால் பைத்தியமாகவும் ஆகிவிடுகின்றனர். சிலரோ எதையும் தாங்கிக்கொண்டு போலி சிரிப்பை முகமூடியாக இட்டு உலாவித் திரிகின்றார்கள். அவர்களது மனதுக்குள் ஆயிரமாயிரம் கவலை எனும் புழுக்கள் நெளிந்துகொண்டே இருந்தாலும் காலம் தந்த காயத்தை நெஞ்சில் சுமந்தபடி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆம்! ராசம்மாவும் அப்படித்தான்!

அவள் மனதளவில் செத்துவிட்டிருந்தாள். தனது கடைசிக் காலம் இப்படி அநாதரவான நிலைமையில் கழியும் என்று அவள் கனவிலும் நினைத்திருக்க மாட்டாள். தாய் தந்தையரிடம் தானொரு இராஜகுமாரியாக இருந்தது போல, அல்லது கணவன் வீட்டில் செல்வச் சீமாட்டியாக வாழ்ந்தது போல இறுதிக் காலத்திலும் இருக்க வேண்டும் என்று எண்ணியிருப்பாள். ஆனால் அவளது மகன் அவள் ஆசையில் இப்படி மண்ணள்ளிப் போட்ட விதமாய் அவளது வாழ்வை திசைமாற்றிவிட்டான்.

000000000

ராசம்மா செழிப்பாக வளர்ந்தவள். அவளது அப்பா நிறைய தோட்டங்கள் வைத்திருந்தார். அதன் மூலம் கிடைத்த வருமானம் அவர்களது வாழ்க்கைக்கு போதுமானதாக இருந்தது. அவள் எது ஆசைப்பட்டாலும் அவளுக்கு மறுக்கப்பட்டதில்லை.

பருவத்தின் பரவசங்களில் ராசம்மாவும் திளைத்திருந்தாள். அவளது அந்தகார இரவுகளின் நினைவுகளில் சின்னராசா வந்துபோனான். அவன் மீது அவள் பேரன்பு கொண்டிருந்தாள். அவனும் அப்படித்தான். ஆனால் வறுமைப்பட்டவன் என்பதால் தைரியமாக ராசம்மாவைப் பெண் கேட்குமளவுக்கு அவனுக்கு துணிச்சல் இருக்கவில்லை. வீரமும் மானமும் ஒரு பெண்ணை வாழ

வைப்பதற்கான தகுதி இல்லை என்பதையும் பணம் என்ற ஒன்றால்தான் வாழ்வைத் தொடர்ந்து நடத்த முடியும் என்பதையும் அவன் உணர்ந்திருந்தான். இதை உணர்ந்த ராசம்மாதான் தன் தலையீட்டினால் அவனை தனதாக்கிக் கொண்டாள்.

சின்னராசாவை மணமுடித்ததில் இருந்து அவளது சந்தோசம் இரட்டிப்பாகவே காணப்பட்டது. அவன் அவள்மீது அளவு கடந்த அன்பைக் காட்டியபோதெல்லாம் அவள் கடவுளுக்கு மனசார நன்றி சொல்லிக் கொள்வாள். சின்னராசாவுடன் வாழ்கின்ற காலங்கள் பொன்னானவையாக இருந்தது அவளுக்கு.

அவன் வீட்டில் அவன் கைப்பட நட்டு வளர்ந்த பெரிய மாமரம் அவள் சிந்தையைக் கவர்ந்த ஒன்று. சின்னராசாவும் அவளும் அதன் நிழலில் அமர்ந்திருந்து ஆயிரம் கதை பேசுவார்கள். ராசம்மாவை ஒரு குழந்தையாக தன் மடியில் இருத்தி அவளது அன்பைக் கேட்டு தவமிருப்பான் சின்னராசா. மாம்பிஞ்சு கனிந்து கனியாகி அதைக் கண்ணாரக் காண்கையில் அவளது மனம் காதலால் கசிந்துருகும். அவ்வளவு சக்தி இருந்துது அந்த மாமரத்துக்கு. சின்னராசா வேலைவிட்டு வரும் வரை நெல் பொருக்குதல், கீரை துப்பரவு செய்தல், நகம் வெட்டுதல், பத்திரிகை படித்தல் போன்றன மாமரத்தின் நிழலில் தான் அரங்கேறும். சின்னராசா நேசிக்கும் அந்த மாமரம் ராசம்மாவின் வாழ்வோடும் ஒன்றிப்போனது. அப்படி இன்பமாக வாழ்ந்தவள் இன்று?

0000000

'ராசம்மா! இன்று மகன் வாராப்பில?' என்றாள் அங்கிருந்த பரிமளா.

அவளது கேள்வியில் மகிழ்ச்சியிருந்தது. மகன் வீட்டுக்கு அழைத்துப் போனால் எவ்வளவு சந்தோசம் என்று எண்ணினாள் அவள். ஆனால் ராசம்மாவின் மனமோ ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு அடித்த வலியை அனுபவித்துத் தீர்த்தது.

'ஏன் ராசம்மா! உம்முனு இருக்கே?'

'என்னத்தச் சொல்ல?' என்ற தோரணையில் மறுபக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டாள் ராசம்மா. அவளது கண்கள் கலங்கின. தொண்டை அடைத்துக்கொண்டது. பரிமளா.. வசந்தா.. தாயம்மா என்று எத்தனைப் பேர் இந்த முதியோர் இல்லத்தில் இருக்கிறார்கள்? அவர்களிடமெல்லாம் கேட்டுப் பார்த்தால் கடலளவு சோகத்தைச் சொல்லுவார்கள்.

பரிமளா முதியோர் இல்லத்துக்கு வருவதற்கு அவளது மருமகள்தான் காரணம் என்று சொன்னாள். பரிமளா ஒருநாள் உடம்புக்கு முடியாமல் படுத்துக் கிடந்தாளாம். மருமகள் அதைப் பார்த்துவிட்டு 'அத்தைக்கு சொகுசு கூடிப் போச்சு' என்றதோடு விடாமல் அவளது கணவனிடமும் அதாவது பரிமளாவின் மகனிடம் போய் ஏதோ உலக மகா தப்பைக் கண்டது போல

ஒப்புவித்துவிட்டாள். அவனும் ஏதே கேட்கக் கூடாததைக் கேட்டவன் போல அரண்டு ஓடி வந்து கன்னாபின்னாவென்று தாயைத் திட்டித் தீர்த்துவிட்டானாம். அந்த வேதனை தாங்க முடியாமல் புலம்பிக் கொண்டிருந்தவளை 'பைத்தியம், அரலூசு' என்றெல்லாம் சொற்களால் வதைத்து இங்கு கொண்டுவந்து விட்டிருக்கிறார்கள்.

வசந்தாவின் கதையோ பரிதாபத்துக்குரியது. அவள் தன் இரு மகள்மாரையும் இழந்து இங்கு வந்திருக்கிறாள். அதாவது ஒரு மகளை மணமுடித்துக் கொடுத்துவிட்டு சற்று நிம்மதியாக இருந்த வேளையில்தான், ஒருநாள் அவளது மருமகன் இளைய மகளிடம் தகாத முறையில் நடக்க முயற்சித்திருக்கிறான். அதை வசந்தா கண்டதும், திகைத்துத் தடுமாறியவன் பின் எதுவுமறியாதவன் போல அப்பால் நகர, 'தூ.. நாயே! நீயெல்லாம் மனுசனா?' என்றுவிட்டு பளாரென அவனை அறைந்திருக்கிறாள் வசந்தா. இது பொறுக்காத அவன், இப்போது எல்லோரும் ஒன்றாக வாழ்ந்து வரும் இந்த வீட்டை தனது பெயருக்கு எழுதித் தராவிட்டால் மூத்த மகளை (மனைவியை) விட்டுவிட்டு போய்விடுவதாக வசந்தாவை மிரட்ட, 'கர்மம்' என்று கறுவிக்கொண்டு வேறு வழியில்லாமல் அதை நிறைவேற்றி வைத்திருக்கிறாள். அதன் பிறகு அவன்தன் மனைவியிடம் இல்லாத பொல்லாத விடயங்களைக் கூறி அவள் வாயாலேயும் வசந்தாவையும், இளையவளையும் வீட்டைவிட்டு துரத்தச் செய்திருக்கிறான். இளையவளை பெண்கள் விடுதியில் சேர்த்துவிட்டு வசந்தா நேராக இங்கு வந்துவிட்டாள். பிறகு சில நாட்களில் இளையவளும் ஒரு வாலிபனோடு சென்றுவிட்டதை அறிந்தவள் மாரடைப்பு வந்து சரிந்தாள். அன்றிலிருந்து அவளும் ஒரு இதய நோயாளியாகிவிட்டிருந்தாள்.

தாயம்மாவின் மகன் தனக்கு வசதியில்லை என்று கூறி அவளை முதியோர் இல்லத்தில் விட்டுவிட்டு மாதா மாதம் பணம் அனுப்பிக் கொண்டிருந்தான். பணம் அனுப்ப முடிந்தவனுக்கு பாசமாய் பார்த்துக்கொள்ள முடியவில்லை. தாயம்மா தாளவியலாத வயிற்றுளைவால் துடித்திருக்கிறாள். அதனைக் கவனித்து சுகப்படுத்த யாருக்கும் தோன்றவில்லை. ஏதேச்சையாக படுக்கையிலே அவளுக்கு மலசலம் கழிந்துவிட்டது. அதைப் பார்த்து மருமகள் போட்ட கூச்சலில் ஆயுளுக்கும் அந்த வீட்டில் அடியெடுத்து வைக்க நினைவு வராது. அதனால் தான் 'வசதியற்றதால்' கொண்டு வந்து இங்கு விட்டிருந்தான் மகன்.

தாய்ப் பாலைக் குடித்த மனித மிருகங்கள் எல்லாம் ஒன்றிணைந்து பெற்றவர்களை இப்படி மற்றவர்களாகப் பார்க்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். இதற்கு யார் காரணம்? பாடசாலைகள் பெருகுவது நாட்டின் முன்னேற்றத்தை பறை சாற்றும். ஆனால் முதியோர் இல்லங்கள் இதயமில்லாத மனிதர்கள் இருக்கிறார்கள் என்றல்லவா உணர்த்துகிறது.

ராசம்மா எழுந்து உட்கார்ந்தாள். பரிமளா கேட்ட கேள்வி நினைவு வந்தது. 'மகன் இன்று வராப்பில?'

0000000

'மகன் இன்று வராப்பில?' என்று ஆனந்தமாக் கேட்டான் சின்னராசா. ஆனந்த்தை கொழும்புக்கு அனுப்பி அங்கே பல இலட்சங்களை செலவு செய்து படிக்க வைத்தான் சின்னராசா. மகன் ஆனந்த் எப்போதும் ஆனந்தமாகவே இருக்க வேண்டும் என்பது ராசம்மாவினதும் சின்னராசாவினதும் கனவு.

ஆனந்த் விடுமுறையில் வீட்டுக்கு வரும்போதெல்லாம் ராசம்மாவுக்குத்தான் கொண்டாட்டம். மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிப் போவாள். சின்னராசாவும் தாயினதும் மகனினதும் அன்பில் ஒன்றித்துப் போய்விடுவான். ஆனந்த்துக்கும் அந்த மாமரம் மீது அப்படி ஒரு பிரியம். தன் ஓய்வு நேரத்தை தாயுடன் இணைந்து மரத்தடியில்தான் கழிப்பான். மாமர நிழலில் அமர்ந்துதான் பசியாறுவான்.

ஒருநாள் ஆனந்த் ஒரு பெண்ணை அழைத்து வந்து தான் மணமுடிக்க இருக்கும் பெண் என அறிமுகப்படுத்தினான். யாருக்கும் எந்த பிரச்சனையுமில்லை. ராசம்மாவுக்கும் தன் மருமகளைப் பார்க்கும்போது சந்தோசமாகத்தான் இருந்தது. எத்தனை அழகானவள், ஆனந்துக்கு மிகவும் பொருத்தமானவள் என்றெல்லாம் கூறி சந்தோசப்படுவாள். திருமணத் தேதி தீர்மானிப்பது வரை விசயம் நடந்து முடிந்த நிலையில் சின்னராசு எந்த அறிகுறியும் இன்றி தூங்கியவாறே இறந்துப்போனான். ராசாம்மாவுக்கு உலகமே இருண்டது போலிருந்தது. வாழ்வின் அடுத்த கட்டம் என்ன என்று தெரியாமல் இருந்தது.

காலம் தன் பாட்டில் கழித்து கொண்டிருந்தது. மாமரம் அவளது உறைவிடமாகிப் போனது. ஆனந்த் அவளின் மனநிலை உணர்ந்திருந்தாலும் வேறு வழியின்றி மணமுடித்துக் கொண்டான். ராசம்மாவுக்கு இருந்த ஒரே துணை அவன்தான். ஆனந்த் தனக்கொரு துணையை தேடிவிட்ட பிறகு அவனை எல்லாவற்றுக்கும் எதிர்ப்பார்ப்பதும் முறையல்ல என்று அவளுக்குத் தெரியும். ஆனாலும் பெற்ற மனம் பித்தல்லவா? மகனின் ஆதரவில் வாழ்நாளை கழித்துவிட விரும்பினாள். எனினும் மகனின் செயல்பாடு காலப்போக்கில் மாறிவிட்டிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக தாயைவிட்டு விலகிக் கொண்டிருந்தான் ஆனந்த். காலம் சுமாரகத்தான் கழிந்தது. மாமரமும் கனிந்தது. ஆனால் ராசம்மாவுக்கு மனம் வெடித்தது. தன் உள்ளக் கிடக்கில் ஊற்றெடுத்த வலிகளை எல்லாம் மாமரத்திடம் சொல்லித் தீர்த்தாள். மரமும் இலையசைத்து அவளை ஆசுவாசப்படுத்தியது.

தயங்கியபடி ஒருநாள் ஆனந்த் ராசம்மாவிடம் வந்தான். அவன் அப்படி வந்தமர்ந்து அவளிடம் பேசி பல நாட்களாகிவிட்டன. தாயுள்ளம் சட்டென களிப்படைந்தாலும் மூளை விழித்துக் கொண்டது.

'என்னப்பா சொல்லு..'

'அம்மா... அது வந்து..'

'எதுக்கப்பா தயங்குற.... தைரியமாச் சொல்லு..'

ஏதாவது பேசப்போகிறான் என்ற எண்ணத்தில்தான் அவளே தைரியமாக சொல்லச் சொன்னாள். ஆனால் அவன் கூறிய விடயம் அவளிதயத்தில் தீ அள்ளிப் போட்டது. பூமி பிளந்து தன்னை விழுங்கி விடாதா? என அவள் ஏங்கிப் போனாள். அவன் என்ன சொன்னான் என்று தன்னைத் தானே மீண்டும் கேட்டுக் கொண்டாள்.

'அம்மா காவியாட அக்காவின் குடும்பம் பிரான்சிலிருந்து வாராங்க. இங்க ஆறு மாதம் தங்க போறாங்க... அதனா...ல ஒரு... ஆறு மாசத்துக்கு உங்கள முதியோர் இல்ல..த்துல விட்டுட்டு அப்புறமா கூட்டியாந்துருவேன்...மா. விருப்பமில்லாட்டி போக வேணாம்... கொஞ்சம் யோசிச்சி சொல்லுங்கம்மா..' என்றான்.

'வீட்டைவிட்டு வெளியே போ' என நாகரீகமாக சொல்கிறான் மகன்! ஆனந்த். ஆனந்தத்தைத் தவிர வேறெதையும் காணக்கூடாது என்று சின்னராசா அடிக்கடி சொன்னது அவளுக்கு அப்பொழுதும் ஞாபகம் வந்து தொலைத்தது. கணவனின் ஆசைப்படி ஆனந்தை ஆனந்தமாக இருக்கக் கூறி, அவள் தயாராகி வெளியே வந்தபோது மருமகள் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தாள்.

'அக்கா நீங்க வாரத சாட்டா வச்சி அத்தைய அனுப்பப் போறன். ஆமாக்கா அவரு தான் கூட்டிப் போறேன்னாரு. சனியன் கிழவி தொலஞ்சதுக்கா..''

இந்த அதிர்ச்சியை நெஞ்சோடு தாங்கிக்கொண்டாள் ராசம்மா. நடை தளர்ந்தது. உடல் குலுங்கியது. பொத்தி வைத்த கவலைகள் கண்ணீராய் பீறிட்டுப் பாய்ந்தது. அவள் கண்ணீரைத் துடைக்க நினைக்கவில்லை. கண்ணீரினூடே வெளியே பார்த்தாள். ஆனந்த் மாமரத்தின் கிளைகளை தறித்துக் கொண்டிருந்தான். ஓவென கதறியழத் தோன்றியது ராசம்மாவுக்கு. தன் கணவனின் பிரியத்துக்குரிய அந்த மாமரம் இப்போது கிளைகளை இழந்துகொண்டிருந்தது. மாம்பிஞ்சுகள் தரையில் உருண்டு கொண்டிருந்தன. ராசம்மாவை ஆதரித்து ஆறுதல் கூறிய அந்த மரம் இப்போது மொட்டை மரமாக சர்வாங்கமும் ஒடுங்கி கூனிக் குறுகி நிற்பதாய் தோன்றியது ராசம்மாவுக்கு. பார்த்துக்கொண்டிருக்கும்போதே அதன் கிளைகளை மேலும் வெட்டிக்கொண்டிருந்தான் ஆனந்த். அதைத் தடுக்க வலுவின்றி யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் தள்ளாடியபடி வீட்டைவிட்டு வெளியேறினாள் அவள்.

ஆம் ராசம்மா என்ற மாமரம் ஆனந்த் என்ற கிளையை தறித்து விட்டுத்தான் வந்தது.

0000000

எழுந்து வார்டனிடம் சென்றாள் ராசம்மா. தன் மகனின் நம்பருக்கு கோல் செய்து பேசுமாறு வார்டனிடம் ஏதோ கூறினாள். வார்டன் பெண் கோல் செய்து,

'தம்பி உங்க அம்மா இங்கவே இருந்துரேனு அடம்பிடிக்கிறாங்க. உங்கள இனி வர வேணாமாம். சந்தோசமா இருக்கட்டாம்' என்று கூறிவிட்டு ராசம்மாவை அனுதாபமாகப் பார்த்தாள். ஆனந்தம் தொலைத்த சிரிப்பு ராசம்மாவின் இதழில் இழையோடியது!!!

(முற்றும்)

# பெண்

மலைகளின் உறுதி
அலைகளின் சலனம்

முட்களின் கூர்மை
கற்களின் மழுங்கல்

பூமியின் பொறுமை
எரிமலையின் குமுறல்

ஓவியத்தின் மௌனம்
வானத்தின் முழக்கம்

தாமரையின் புனிதம்
சகதியின் அழுக்கு

ரோஜாவின் மென்மை
வைரத்தின் கடினம்

சந்திரனின் குளிர்ச்சி
சூரியனின் வெப்பம்

இவற்றையெல்லாம்
சிறிது சிறிதாக எடுத்து
குழைத்துக் குழைத்து
பக்குவமாக
ஊட்டி வளர்க்கப்பட்ட
அற்புதப் படைப்பு!!!

● உ. நிசார்

**"பூங்காவனம்" கிடைக்குமிடங்கள்**

பூபாலசிங்கம் புத்தகசாலை கொழும்பு - 06
பூங்காவனம் பதிப்பகம் - கல்கிசை



# நேர்காணல்

# திரு. கா. தவபாலன்

சந்திப்பு
ரிம்ஸா முஹம்மத்

**01. நீங்கள் முதன் முதலில் இலக்கியத் துறையில் காலடி வைத்த அனுபவம் பற்றிக் கூற முடியுமா?**

ஆம்! ஞானம் இலக்கியச் சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே வாசகர் கடிதங்களையும் சமகால கலை இலக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய அறிக்கைகளையும் அச் சஞ்சிகைக்கு அனுப்பி வந்தேன். 2009 ஆம் ஆண்டு முற்பகுதியில் நான் எழுதிய ஒரு சிறுகதையையும் கவிதையையும் இச்சஞ்சிகைக்கு அனுப்பி வைத்தேன். அவற்றை ஏற்றுப் பிரசுரித்ததன் மூலம் டாக்டர் ஞானசேகரன் அவர்களே என்னை இலக்கியத் துறைக்கு அறிமுகப்படுத்தினார்.

**02. அதன்பின்னரான காலகட்டத்தில் உங்கள் இலக்கியச் செயற்பாடு எவ்வாறு அமைந்தது?**

படிப்படியாக எனது இலக்கியச் செயற்பாட்டை விரிவுபடுத்தினேன். பூங்காவனம், ஜீவநதி, தாயக ஒலி, மல்லிகை, நீங்களும் எழுதலாம், சுவைத்திரள், செங்கதிர் ஆகிய சஞ்சிகைகளிலும் எனது ஆக்கங்கள் பல பிரசுரிக்கப்பட்டன. வீரகேசரி வாரவெளியீடு, ஞாயிறு தினக்குரல், தினசரி தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் அனேகமான கட்டுரைகளையும் எழுதி வந்துள்ளேன்.

**03. பத்திரிகைகளுடனான தொடர்பு எவ்வாறு ஏற்பட்டது?**

சமஷ்டி முறை பற்றிக் கட்டுரையொன்றை எழுதி திரு. சிவாஜியின் உதவியுடன் அதனை வீரகேசரி வாரவெளியீட்டின் அப்போதைய பொறுப்பாசிரியரான திரு. தேவராஜ் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அவர் அக்கட்டுரையை 2007.04.15 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரித்து உதவினார். இதுவே பத்தி எழுத்து தொடர்பான எனது முதலாவது அனுபவமாக அமைந்தது. அதன்பின்னரான காலகட்டத்தில் தினக்குரல்

பிராந்திய முகாமையாளர் திரு. இரா.அ. இராமன், ஞாயிறு தினக்குரல் பொறுப்பாசிரியர் திரு. பாரதி இராஜநாயகம் அவர்களையும், பிரதம ஆசிரியர் திரு வீ. தனபாலசிங்கம் அவர்களையும் அறிமுகப்படுத்தி வைத்தார். அதன்பின் அப்பத்திரிகைகளில் ஏராளமான கட்டுரைகளை எழுதி வந்தேன்.

**04. பத்திரிகைகளில் என்ன வகையான கட்டுரைகளை எழுதுவீர்கள்?**

தமிழ் பேசும் மக்களின் பொதுவான பிரச்சனைகள், மலையக மக்களின் பிரச்சனைகள், பெண்கள், தலித்துக்கள் ஆகியோர் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி பெரும்பாலும் கட்டுரைகளை எழுதுவது வழக்கம்.

**05. உங்களுக்கு இலக்கியத் துறையில் ஈடுபாடு ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமைந்த சந்தர்ப்ப சூழ்நிலைகள் பற்றிக் கூறுங்கள்?**

தந்தையாரின் அறிவுறுத்தல் காரணமாக நான் 13 வயதிலேயே இராமாயணம், மகாபாரதம் ஆகிய நூல்களை வாசிக்கத் தொடங்கினேன். 15 வயதிலிருந்து இன்றுவரை தினசரிப் பத்திரிகைகளையும் இலக்கியச் சஞ்சிகைகளையும் வாசித்து வருகிறேன். நான் யாழ்ப்பாணத்தில் வசித்த காலத்தில் திருவாளர்கள் தேவபாலசிங்கம், செம்பியன் செல்வன், சோ.பத்மநாதன், நவரேந்திரன் சோமசுந்தரம் ஆகிய மூத்த இலக்கியவாதிகளுடன் தொடர்பு ஏற்பட்டது.

கொழும்பில் வசித்த காலத்தில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பிரிவில் பதிவு செய்து பரீட்சைகளில் சித்தியடைந்து அரசியல் விஞ்ஞானத்தில் பீ.ஏ. பட்டத்தைப் பெற்றுக்கொண்டேன். தமிழ் இலக்கியம், ஆங்கில இலக்கியம், உளவியல், இந்திய சரித்திரம் ஆகியவற்றை உப பாடங்களாகக் கற்றமையால் எனது தேடல் முயற்சிகள் மேலும் விரிவடைந்தன.

இலக்கிய சஞ்சிகைகளான பூங்காவனம், ஜீவநதி, ஞானம் தாயக ஒலி, மல்லிகை, செங்கதிர், நீங்களும் எழுதலாம், சுவைத்திரள் ஆகியவற்றின் பிரதம ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் நான் இலக்கியத் துறையில் வளர்வதற்கு வாய்ப்பாக அமைந்த காரணிகள் ஆகும். இவர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன். இதேவேளையில் திரு. ஆர். பாரதி, திரு. தனபாலசிங்கம், திரு தேவராஜ் ஆகியோருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

**06. இடதுசாரி இலக்கியம் பற்றிய உங்கள் கண்ணோட்டம் என்ன?**

மார்க்சிஸ கண்ணோட்டத்துடன் இலக்கியம் படைப்போர் இடதுசாரி இலக்கியவாதிகள் என்று அழைக்கப்படுகின்றார்கள். ஆனால் மார்க்சிஸத்தை இலக்கியத்துட் புகுத்தக்கூடாது என்பது மாக்சிஸத்தை ஏற்றுக்கொள்ளாத

இலக்கியவாதிகளின் வாதமாகும். ஆகவே இலக்கிய வாசகர்கள்தான் இவ் விடயத்தில் சரி பிழைபற்றித் தீர்மானிக்க வேண்டும்.

**07. தமிழ் இலக்கியம் என்று பொதுவாகக் கூறாமல் ஈழத்து இலக்கியம், மலையக இலக்கியம், இஸ்லாமிய தமிழ் இலக்கியம், தலித் இலக்கியம் என்றெல்லாம் ஏன் பிரித்துப் பேசவேண்டும் என்று ஒரு சிலர் கேட்கின்றனர். இதற்கு நீங்கள் கூறும் பதில் என்ன?**

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகள் தமிழக இலக்கியத்தில் எதிரொலிப்பதில்லை. ஆகவே நாங்கள் எமது பிரச்சனைகளைப் பிரதிபலிக்கும் நோக்கில் நாங்களே இலக்கியம் படைக்கத் தொடங்கினோம். இதனால்தான் ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்று அழைக்கும் மரபு உருவாயிற்று. அதேபோல போரை உற்றுக் கவனித்தவர்கள் போரிலக்கியம் படைத்தார்கள். புலம் பெயர்ந்தவர்கள் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தைப் படைத்தார்கள். இதேபோலத்தான் ஏனைய இலக்கியப் பிரிவுகளும் தோற்றம் பெற்றன. இதைத் தவறென்று கூறிவிட முடியாது.

**08. நீங்கள் சிறுகதைகளுடன் கவிதைகளையும் எழுதி வருகின்றீர்கள். மரபுக் கவிதையா புதுக்கவிதையா சிறந்தது என்ற வாதவிவாதங்கள் நடக்கின்றன. பின் நவீனத்துவம் பற்றியும் பேசப்படுகின்றது. இவைபற்றிய உங்கள் கருத்து என்ன?**

எதுகை, மோனை, உவமை, ஓசைநயம், அடுக்குச்சொற்கள் ஆகிய அம்சங்களை உள்ளடக்கிய மரபுக் கவிதைகள் தொடர்ந்தும் எழுதப்படவேண்டும். அதேவேளையில் புதிய கருத்துக்களையும் காத்திரமான செய்திகளையும் வெளிப்படுத்தும் புதுக்கவிதைகளையும் நாம் வரவேற்றுத்தான் ஆகவேண்டும் என்பதே எனது கருத்து.

உலகியல் விவகாரங்கள் யாவும் மாற்றத்துககு உட்பட்டவையாகக் காணப்படுகின்றன. இலக்கியம்கூட இந்த நியதிக்கு உட்பட்டது என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆகவே ஆகப் பிந்திய அல்லது புதிய மாற்றங்களை உள்வாங்குவதற்கு பின் நவீனத்துவக் கொள்கை அவசியமான ஒன்றுதான் என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை.

**09. ஈழத்து தமிழிலக்கிய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக உள்ள பிரதான காரணிகள் என்ன?**

இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி உற்பத்தியில் தன்னிறைவு பெற முயற்சிக்கும் நாடு இந்திய நாடு. அந்நாடு புத்தகங்கள் சஞ்சிகைகள் விடயத்திலும் அதே கொள்கையைத்தான் கடைப்பிடிக்கின்றது. அதாவது

தமிழ்ப் புத்தகங்களும் சஞ்சிகைகளும் இந்தியாவில் போதிய அளவில் அச்சிடப்படுவதால் ஈழத்துப் புத்தகங்களும் சஞ்சிகைகளும் இந்தியாவுக்குள் இறக்குமதி செய்யத் தேவையில்லை என்று தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தியாவில் அச்சிடப்படும் தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் எவ்விதத் தடையுமின்றி இலங்கையில் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இது ஒருதலைக் காதல் விவகாரம் போன்றதாகும். ஈழத்து தமிழ் எழுத்தாளர்கள் தமது புத்தகங்களை தமிழ்நாட்டுச் சந்தைக்கு அனுப்ப முடியாமல் இருப்பதால் பாரிய நட்டத்தை அனுபவிக்கிறார்கள். இது ஈழத்தமிழிலக்கிய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக உள்ள முதலாவது விடயம் ஆகும்.

அடுத்த விடயம் பின்தங்கிய தமிழ்ப் பிரதேசங்களில் இலக்கியப் புத்தகங்களையோ சஞ்சிகைகளையோ காணமுடியவில்லை. நலிவுற்ற மக்கள் பிரிவினருக்காக நாம் இலக்கியம் படைக்கும்போது அது அம் மக்களைச் சென்றடையாவிட்டால் இதனையும் இலக்கிய வளர்ச்சிக்கு எதிரான முட்டுக்கட்டையாகவே நான் பார்க்கின்றேன்.

**10. பூங்காவனம் பற்றிய உங்கள் மதிப்பீடு எவ்வாறு உள்ளது?**

கடுகு சிறிது காரம் பெரிது என்பதுபோல பூங்காவனம் உருவத்தில் சிறியதாக இருந்தபோதிலும் தரத்திற் சிறந்ததாக உள்ளது. இது பெண்களாலேயே நடத்தப்படும் சஞ்சிகை என்பது உலக சாதனையாகவே பார்க்கப்படவேண்டும்.

## வாசகர் கவனத்திற்கு

சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள். அது பூங்காவனம் சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதையும், கிடைப்பதையும் உறுதி செய்யும். சந்தாதாரராக இணைந்து கொள்பவர்கள் ஆகக் குறைந்தது 600/= ரூபாவை சந்தாவாக செலுத்தவும். பக்கச்சார்பற்ற முறையில் எழுதப்பட்ட, தெளிவான கையெழுத்தில் அமைந்த, இதுவரை பிரசுரமாகாத (சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் A4 தாளில் 03 பக்கங்களுக்குள்) ஆக்கங்களையே பூங்காவனம் எதிர்பார்க்கிறது. பூங்காவனம் இதழில் விளம்பரங்களைப் பிரசுரிக்க மற்றும் கொடுப்பனவுகள், சந்தா, விற்பனை முகவர்களின் தொடர்புகள் ஆகியவற்றுக்கு 077 5009 222 என்ற தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்!

ஆசிரியர்



# இரங்கல்

நிறைகுடமாய் வாழ்ந்தவர் எஸ்.எச்.எம். ஜெமீல்
நினைவை விட்டகலாதவராய் உள்ளவர் அவர்
நிறைவாய் மனங்களைப் பற்றிப் பிடித்துள்ளார்
குறைகுடம் அல்லர்.. தளம்பல் அவரிடம் இல்லை!

மரணம் மனிதனின் இயல்பு ஆட்பட்டுவிட்டார்
இரணம் குறைந்ததும் மனிதன் மரணத்தில் ஆழ்வான்
கரணம் அடிக்காத கள்ளங்கபடமற்ற பெரியவர்
இரங்குதல் காட்டி நிற்கின்றோம் யாம் எல்லாம்!

இகத்தில் வாழ்வாங்கு வாழ்தலில் நிறைவு கண்டவர்
இலட்சியத்தை வாழ்வுதனில் பூர்த்தி செய்தவர்
பலரையும் வழிப்படுத்திப் பல் துறையையும் சீர்செய்தவர்
பாங்காய் நாம் போற்றிடக் காரணர் ஆயிருந்தவர்!

கல்வித்துறையில் ஏற்றம் கண்டு நின்ற அவர்
கல்வியால் கண்ட பயன் நாடடையச் செய்தவர்
சமூகம் விழிப்புப் பெறப் பல்துறையிலும் உழைத்தவர்
சகஜமாய் உற்ற இழப்பு.. எனினும் நாம் படும் துயர் எல்லைகாணா!

அனைவரையும் தூக்கிவிட அரும்பாடுபட்டார்
அவர் அரவணைப்பில் குளிர்காயாத இலக்கியக்காரர் இல்லை
அல்லாஹ்வே! இத்தகு தியாக சிந்தை நிறை ஜெமீல் அவர்களை
வல்லான் நீ பிர்தௌஸ் சுவர்க்கமதில் நுழைத்துவிடு ரஹ்மானே!!!

● வெலிப்பன்னை அத்தாஸ்

ப்ரியமான வாசகர்களே! உங்களால் இயன்ற அன்பளிப்புக்களை வழங்குவதன் மூலம் 'பூங்காவனம்' சஞ்சிகையின் தொடர் வளர்ச்சிக்கு உதவுங்கள்!

# எஸ்.ஆர். பாலசந்திரனின்

## குறுங்கதைகள் இரண்டு

## பாவ பலன்

கோட்டை புகையிரத நிலையத்தில் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. அங்கே 14 வயது சிறுமி ஒருத்தி நின்றுகொண்டிருந்தாள்.

“ஐயா துரைமார்களே! கண்ணிரெண்டும் தெரியாத பெண் ஐயா.. ஏதாவது தானம் பண்ணுங்க. புண்ணியமாயப் போகும்..”

நோட்டுக்களும் சில்லறைகளும் அவளது தட்டில் விழுந்துகொண்டிருந்தன. இதை கோவிந்தன் கவனித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு நாற்பது வயதிருக்கும். உழைக்க விருப்பமில்லாதவன். யாரையாவது ஏமாற்றிச் சுருட்டுவதே அவனது தொழில். சிலநேரங்களில் காய்கறி, மீன் விற்க வரும் பெண்களிடம் அடாவடித்தனம் செய்து காசு பறிப்பான். ஒரு கடைக்குள் புகுந்த அவன் யாருக்கும் தெரியாமல் நூறு ரூபா அளவில் வெட்டிய பேப்பர் துண்டுடன் வந்தான்.

“இந்தா பொண்ணு. நூறு ரூபா போடுறேன்.. மீதி தொண்ணூறு ரூபா எடுக்கிறேன்” என்றான்.

“எடுங்க அண்ணே!” என குருட்டுப் பிச்சைக்காரி கூறவே பேப்பர் துண்டைப் போட்டுவிட்டு சில்லறையும் நோட்டுமாக நூற்றி இருபது ருபாய் தட்டிலிருந்து எடுத்துக்கொண்டான் கோவிந்தன்.

வாயெல்லாம் ஒரே சிரிப்பு. சிறிது போதையுடன் மாலையில் வீட்டுக்குப் போனான். பக்கத்து வீட்டு மஞ்சுளா ஓடி வந்தாள்.

“மாமா உங்கள் மனைவிக்கு பிரசவ வலி வந்துவிட்டது. இரண்டு மணிக்கு ஆஸ்பத்திரிக்கு கூட்டிப் போனாங்க. குழந்தை பிறந்துடுச்சாம். உங்கள உடனே வரச் சொல்லி உங்க மனைவி சொல்லச் சொன்னாங்க” என்றாள். கோவிந்தான் விரைந்து சென்றான்.

வார்டுக்குள் புகுந்தவன் மனைவி இருந்த இடத்தை அடையாளம் கண்டுகொண்டான். அவனைக் கண்டதும் மனைவி கதறினாள்.

“ஐயோ நம்ம குழந்தையைப் பாருங்கோ. இரண்டு கண்ணும் குருடாக பிறந்திருக்கு.. ஐயோ பெட்டைப் பிள்ளையாச்சே.. நான் என்ன செய்வேன் கடவுளே!” எனக் கதறினாள்.

கோவிந்தன் திகைத்துப் போய் நின்றான்.

“ஐயா துரைமார்களே! கண்ணிரெண்டும் தெரியாத பெண் ஐயா.. ஏதாவது தானம் பண்ணுங்க. புண்ணியமாயப் போகும்” எனக் கூறிய பிச்சைக்காரப் பெண் கோவிந்தனின் நினைவில் வந்தாள்!!!

# எதிர்பாராதது

அன்று புதிய பொலிஸ் ஸ்டேசன் திறப்பு விழா. ஸ்டேசனில் ஒரே கூட்டம். அது ஒரு கிராமம். அங்கே பொலிஸ் ஸ்டேசன் இல்லை. பலரின் முயற்சியின் பின் புதிய பொலிஸ் ஸ்டேசன் திறக்கப்பட்டது. ஊரில் நல்ல பெயர் உள்ள கந்தசாமி தலைமை தாங்க அழைக்கப்பட்டிருந்தார். கந்தசாமி நல்லதொரு பேச்சாளர்.

இவ்வளவு காலமும் பொலிஸ் ஸ்டேசன் இல்லாமல் பட்ட கஷ்டங்களைப் பற்றி கந்தசாமி தெளிவாகக் கூறினார். புதிதாக வந்திருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தயவு தாட்சணம் பாராது குற்றவாளிகளைப் பிடித்து தண்டிக்க வேண்டும். அந்த லாக்அப் அறைக்கு முதலாவது வரும் பாக்கியவான் யார்? அவன் வந்தால் எனக்குச் சொல்லி அனுப்புங்கோ. பிரியாணிப் பொட்டலத்துடன் வந்து நானே ஊட்டி விடுகின்றேன் என்றார்.

அவரது பேச்சு எல்லோரைரையும் சிரிப்பில் ஆழ்த்தியது. ஓ.ஐ.சி நவரத்தினமும் புன்சிரிப்புடன்,

‘விசாரணைக் கைதியின் பெயரை புத்தகத்தில் எழுதும் பொறுப்பு கந்தசாமி ஐயாவுக்கே’ என பதில் கூறினார். ஒரே கைத்தட்டல். சிறிது நேரத்தில் எல்லோரும் கலைந்து சென்றனர்.

மாலை ஆறு மணியிருக்கும். ஓ.ஐ.சி நவரத்தினம் ஸ்டேசனுக்குள் நுழைந்தார். லாக்அப் இல் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். கதிரையில் அமர்ந்தவர் கான்ஸ்டபிள் குமாரை அழைத்தார்.

'யாரப்பா அந்த புண்ணியவான்? முதலில் கந்தசாமி ஐயாவுக்கு செய்தி அனுப்பு. அவரே புத்தகத்தில் பதியட்டும்' என்றார்.

'சேர் கந்தசாமி ஐயா வர மாட்டார்'

'ஏன் வெளியூர் போய் விட்டாரா?'

இல்ல சேர் இங்க தான் இருக்கார். வேலைக்காரனை அடித்து காயப்படுத்திய குற்றத்திற்காக அவரை உள்ளே தள்ளியிருக்கிறோம். அதோ பாருங்கள்.

ஓ.ஐ.சி நவரத்தினத்துக்கு மயக்கம் வரும்போலிருந்தது!!!

# மரண வலி

உடைத்து வெளிவந்த
என் அழுகையை
அடைத்து வைத்துக்
காத்திருந்தேன்..

முடிந்துவிடாத
உன் பயணத்தை எண்ணி
இடிந்து போய்
அமர்ந்திருந்தேன்..

தேக்கி வைத்த
என் சோகங்கள் - நன்றாய்
தாக்கி விட்டது உள்ளத்தை!

புதைத்து வைத்த துன்பங்கள்
மேற்கிளம்பி
வதைத்து என்னை
பாடுபடுத்தியது!

வேரோடு என் இதயத்தை
பிடுங்கிச் சென்றுவிட்டாய் - நீ
ஊருக்குப் போகையிலே!

மறைத்து வைத்த
பாசத்தை எல்லாம் மெதுவாய்
உரைத்துவிட்டது உன் பிரிவு!


என் ஜனனத்தின்
மறுபிறப்பாய் நீதானே இருக்கிறாய்
என் மரணத்தின்
வலியாகவும் நீயேதான்
இருக்கின்றாய்!!!

● குறிஞ்சி நிலா

# மழலையர் மாருதம் நூல் பற்றிய கண்ணோட்டம்

## நூல் மதிப்பீடு

● நிலாக்குயில்



கிழக்கிலங்கையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எழுத்தாளரான ஜெனீரா அமானின் மழலையர் மாருதம் எனும் நூல் வெளிவந்திருக்கின்றது. சிறுவர் உளவியல் கட்டுரைகளின் தொகுதியாக வெளிவந்திருக்கும் இந்நூல் குழந்தை வளர்ப்பு, குழந்தைகளின் மனநிலை போன்றவற்றை உணர்ந்து குழந்தைகளை சீராக வளர்ப்பதற்காக பல விடயங்களைப் பற்றி பேசியிருக்கின்றது.

இந்நூலுக்கான அணிந்துரையை வழங்கியிருக்கும் கலாநிதி கே.எம். இக்பால் அவர்கள் "மனித வாழ்வில் பிள்ளைப் பருவம் முக்கியமானது. பெற்றோர் தமது பிள்ளைகளை உளவியல் ரீதியாக அணுகிட இந்நூல் உதவும். பிள்ளைகளின் உடல் உள நலன்களைப் புரிந்துகொள்வது அவர்களின் முன்னேற்றத்திற்கு அவசியமாகும். இந்நூலில் உள்ள கட்டுரைகள் பிள்ளைகளின் உடல், உள தேவைகளை நிறைவேற்ற உதவும்" என்கிறார்.

இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள். குழந்தைகள் நற்பிரஜைகளாக வளர்வதற்கான அடித்தளம் முதலில் வீட்டிலிருந்துதான் ஆரம்பமாகின்றது. வீட்டில் பெற்றோர் குழந்தைகளுடன் நடந்துகொள்ளும் முறை, குழந்தையின் தேவையை அறிந்து அதை நிறைவேற்றும் முறை போன்ற குழந்தை வளர்ப்பிற்கு இன்றியமையாதவையாகும். குழந்தைகளின் மனதைப் புரிந்துகொண்டு அதற்கேற்றாற்போல செயற்படும்போது அவர்களின் உடல், உள ரீதியான பிரச்சினைகளை நாம் கண்டுகொள்ள இயலும். ஒரு சிறந்த நிர்வாகியாக தாயும், தந்தையும் செயற்படும்போது குழந்தைகளின் மன வளர்ச்சியும் ஆரோக்கியமானதாகவே இருக்கும். அவ்வாறில்லாமல் தான்தோன்றித்தனமாக குழந்தைகளை செயல்பட அனுமதித்தால்

குழந்தைகள் மனதளவில் சிதைந்து நல்லொழுக்கமற்ற, சமுதாய துரோகியாக வளர்வதற்கு ஏதுவாக அமையும்.

தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்கள். அந்த கூற்றுக்கிணங்க குழந்தைகள் விரல் சூப்புவதை சிறுவயதிலேயே கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் வளர்ந்து பெரியவர்களானாலும் அவர்களால் அப்பழக்கத்தை விடமுடியாமல் மிகவும் கஷ்டப்படுவார்கள். விரல் சூப்பும் பழக்கமானது குழந்தைகளின் பற்களை உறுதியற்றதாக்கி விடுகின்றது. அதுபோல் குழந்தைகள் பிடிவாதக் குணம் உள்ளவர்களாகுவதற்கும் ஏதுவான காரணியாக அது அமைகின்றது. எனவே வேறு விடயங்களில் குழந்தைகளின் கவனத்தை திசை திருப்ப வேண்டும் என்பதாக அறிவுரை சொல்லியிருக்கின்றார் நூலாசிரியர்.

அன்பு உலகை இயங்கச் செய்கின்றது. அன்பால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை யாவருக்கும் அன்பு ஒரு ஆயுதமாக, கேடயமாக இருக்கின்றது. அன்பு காட்டுபவர்களையே குழந்தைகள் அதிகம் நேசிக்கின்றார்கள். தனிமையில் விடப்படும் குழந்தை கத்தி அழுகின்றது. தாய் ஓடிவந்து உணவு ஊட்டிவிட்டு குழந்தை பசிக்காக அழுததாக தீர்மானிக்கிறார். ஆனால் அன்பை எதிர்பார்த்து அதை பெற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கும் குழந்தை மனதளவில் மிகவும் பாதிக்கப்படுகின்றது.

எனவே தன் பக்கம் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்க ஏனைய குழந்தைகளை அடித்தும், கிள்ளியும் தனது செயல்களை மாற்றிக்கொள்கின்றது. அது பொறாமையாக உருவெடுத்து விடுவதாக இந்த நூலில் உள்ள கட்டுரை அமைந்திருக்கின்றது. நாம் சாதாரணமாக நினைக்கும் ஒரு விடயத்தில் எத்தனை தூரம் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை நூலாசிரியர் மிக அருமையாக சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

விருப்பு வெறுப்புக்கள் மனிதனாகப் பிறந்த எல்லோருக்கும் வேறுபடும். குழந்தைகள் விடயத்தில் அது மிகவும் கரிசனை காட்டப்பட வேண்டியதொன்றாகும். குழந்தைகளுக்கு உணவூட்டுவது பெரும் பிரச்சினைகளில் ஒன்று. எல்லா தாய்மார்களும் முகம்கொடுக்கின்ற மிக முக்கியமான பிரச்சினை இது. தாம் விரும்பியவற்றை பிள்ளைகளுக்குத் திணிக்காமல் பிள்ளை விரும்பும் உணவை அறிந்து அதைக் கொடுக்க வேண்டும். ஆனால் அந்த உணவு ஆரோக்கியமானதாக இருப்பது அவசியம்.

பிள்ளைகள் தம் பிஞ்சுக் கைகளால் தாமாக உணவை அள்ளிச் சாப்பிடவே மிகவும் விரும்புவார்கள். ஆனால் உணவை சிதறி விடுவார்கள் என்பதற்காக குழந்தைகளின் கையில் கொடுக்காமல் இருப்பது பிழையான செயலாகும் என்று உணவூட்டல் சம்பந்தமாக இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'சிறு பிள்ளைகள் தானே.. வளர்ந்ததும் திருந்திவிடுவார்கள்' என்ற கோட்பாட்டிலிருந்து பெற்றோர்கள் விலகிக்கொள்ளல் அவசியம். ஏனெனில் பிள்ளைகள் பெரியவர்களானதும் திருந்திவிடுவதில்லை. சிறுவயதில் தாம் பழகியவற்றை சரியென்றே அவர்கள் எண்ணுகின்றார்கள். பெற்றோர்கள் கண்டிக்காத செயல்கள் சிறுவர்கள் உள்ளத்தில் சரியானவை என்ற பதிவையே உருவாக்கிவிடுகின்றன.

சின்னச் சின்ன பொருட்களை திருடுவது தெரிந்தாலே ஆரம்பத்தில் அதைத் தடுக்க வேண்டும். திருடுவது தவறு, மற்றவர்களின் பொருட்களுக்கு ஆசைப்படக் கூடாது என்று பிள்ளைகளிடம் ஆணித்தரமாக எடுத்துரைக்க வேண்டும். அப்போதுதான் பிஞ்சு உள்ளத்தில் அது பதியும். அதைவிடுத்து அவற்றை இரசித்து சிரித்துக் கொண்டிருந்துவிட்டால் எதிர்காலத்தில் அழுது தீர்க்க வேண்டியேற்படும்.

மழலையர் மாருதம் ஜெனீரா கைருல் அமானின் ஏழாவது நூல் வெளியீடாக அமைந்துள்ளது. இவர் ஏற்கனவே பாலர் பாடல் (சிறுவர் பாடல் - 1991), சின்னக்குயில் பாட்டு (சிறுவர் பாடல் - 2009), பிரியமான சினேகிதி (சிறுகதை - 2009), மிதுஹாவின் நந்தவனம் (சிறுவர் கதை - 2010), கட்டுரை எழுதுவோம் (03 - 05 ஆம் வகுப்புக்களுக்குரியது - 2010), முப்லிஹாவின் சிறுவர் கானங்கள் (சிறுவர் பாடல் - 2012) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

குழந்தைகளை நல்வழிப்படுத்தி சிறந்தவர்களாக அவர்களை மாற்றுவதற்குரிய சிறந்த பல ஆலோசனைகளை முன்வைத்து மழலையர் மாருதம் என்ற நூலைத் தந்த ஜெனீரா கைருல் அமான் பாராட்டுக்குரியவர். அவரது இலக்கியப் பணி தொடர வாழ்த்துகின்றேன்!!!

**நூலாசிரியர் - ஜெனீரா அமான்**
**நூல் - மழலையர் மாருதம்**
**தொலைபேசி - 0262236487**
**வெளியீடு - அல் அக்தாப் இலக்கிய மன்றம், கிண்ணியா**
**விலை - 200 ரூபா**

# நிரந்தரம்

இரவல் பெற்று
இடித்து கட்டிய
வாழ்க்கை இது!

ஊரும்
உறவுகளும்
தற்காலிக
சொந்தங்களாக
உறங்கியிருந்தது
உண்மை!

உடலுக்குள் வாழும்
உயிர்
உணர்வுகள்
உள்ளம்
இவை யாவும் நீ அளித்த
தற்காலிக
இரவல் இயக்கங்கள்!

இந்த மண் மீதான
நடை...
உடை...
வாழ்க்கை..
யாவும்தான்
உரிமையற்றவை
நிலையற்றவை
நிரந்தரமற்றவை!

ஆனால்
நான் சேமிப்பாக்கிய
நலன்கள்
இது இரவல்கள் அல்ல
நிலையானவை
நிரந்தரமானவை!!!

● ஏ.சீ. ஜரீனா முஸ்தபா

# குறும்பாக்கள்

## மோசடி

ஒழுக்கமிலாக் கல்வியினைக் கற்று
உதவாது பணமதிலும் பற்று
உழைப்பதுவே நோக்கு
உயரறிவை நீக்கி
இழிவானால் சமூகத்தில் புற்று

## புற்று

போக்கிரியாம் தீயவனின் பேச்சு
பொய்யுரையால் சேரும் பிறர் ஏச்சு
தானே வல்லவனாய்
தன்னடக்கமில்லாதவன்
ஒழுக்கப்பெயர் விலைமதிப்பின்றாச்சு!!!

## ஏமாற்று

பிரசங்கம் செய்கின்றார் செட்டி
பணமெல்லாமவர் வீட்டில்கொட்டி
இரக்கத்தைக் கொன்று
ஏழையரை வென்ற
உரையாலேயவர் அன்புக்கட்டி

## எதிர்பார்ப்பு

வெயிலுக்கஞ்சி மனிதர் ஓட்டம்
வினைப் பயனாவென்று மனம் வாட்டம்
மேகம் மழை கட்டி
மேதினியில் கொட்டி
வாராதோயென்றவர்கள் தேட்டம்

● மருதூர் ஜமால்தீன்

# வாழ்க்கை

## உருவகக் கதை

எஸ். முத்துமீரான்

அண்டம் அதன் மையப் புள்ளியில் இருந்து சுழன்று கொண்டிருக்கிறது. அதில் அணு அசைவதையும், ஆண்டவன் நோக்கிக் கொண்டிருக்கிறான். இறைவனின் ஆளுமையின் முன்னே, தேவர்கள் பனிக்கட்டிகளாக உருகிக் கொண்டிருக்கின்றனர்.

அப்பொழுது உலகின் ஒரு மூலையில் நாடகமொன்று ஈசனின் நெறியாள்கையில் மேடையேறிக் கொண்டிருக்கிறது. பசியின் அகோரப் பிடியில் சிக்குண்டு, கிழவன் ஒருவன் வேதனையோடு குந்திக் கொண்டிருக்கிறான். கிழவனின் குருதியைக் குடிக்க நுளம்பொன்று போராடிக் கொண்டிருக்கிறது. நுளம்பு கிழவனின் குருதியைக் குடிக்க முயற்சிக்கும் போதெல்லாம் கிழவன் அதைக் குடிக்க விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறான். போர்க்களம் உக்கிரமடைகிறது. களத்தில் தோல்வியுற்ற நுளம்பு, வேதனையோடு பறந்து போய் குடிசையின் ஒரு மூலையில் குந்திக் கொண்டிருக்கிறது. எல்லாம் வல்ல இறைவன் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறான். எமன் எக்காளமிட்டுச் சிரிக்கிறான். போர்க்களத்தில் தோல்வி கண்ட நுளம்பு, சோகத்தோடு இறைவனிடம் பிரார்த்தித்தது.

"இறைவா! என் பரிதாப நிலையைப் பார்த்தாயா? கருவில் இருக்கும் சீவனுக்கும் காலம் தவறாது உணவளிக்கும் நீ, ஏன் என்னைப் போட்டு சோதிக்கின்றாய்? இந்தக் கிழவன், அவனிடம் நான் நெருங்கும் போதெல்லாம் என்னை அடித்துத் துரத்துகின்றான். என்னால் பசியைத் தாங்க முடியாமல் இருக்கிறது. நானும் உன் படைப்புத்தானே? நேரம் தவறாமல் எனக்கு உணவளிப்பது உன் கடமையல்லவா? எனக்குரிய உணவைத் தந்து விடு, இல்லாவிட்டால் என் சீவனை எடுத்து விடு"

என்று கூறி, இறைவனிடம் கெஞ்சிப் பிரார்த்தித்தது. வேதநாயகன் நுளம்பின் பிரார்த்தனையைப் பார்த்து சிரிக்கிறான்.

ஈசனின் நெறியாள்கையில் மேடையேறிக் கொண்டிருக்கும் நாடகத்தைப் பார்த்து, எமன் லயித்துப் போய் நிற்கின்றான். அப்பொழுது மீண்டும் நுளம்பு உணவிற்காக வந்து, கிழவனோடு போராடிக் கொண்டிருக்கிறது.

போர்க்களத்தில் ஆண்டவனின் தத்துவங்கள் கருக்கட்டி, ஒளியாகித் தெறிப்பதைப் பார்த்து, தேவர்கள் வாய் மூடி மௌனிகளாகி நிற்கின்றனர். படைத்தவன் நுளம்பின் அறியாமையை எண்ணிச் சிரித்து "வயிற்றில் வளரும் கருவிற்கும், கல்லுக்குள் வாழும் தேரைக்கும் காலம் தவறாது உணவளக்கும் நான்தான், அவைகளின் வாழ்வையும் வினாடியும் தவறாமல் கணித்துக் கொண்டிருப்பவன். என்னால் தீர்மானிக்கப்பட்ட ஒவ்வொரு சீவனின் உணவும், அவைகளுக்கு குறைவின்றிக் கிடைத்துக் கொண்டே இருக்கும். இது சத்தியம்" என்று கூறுகிறான். அண்டம் அமைதியாகச் சுழன்று கொண்டிருக்கிறது. பசி சென்னியைத் தாண்ட, நுளம்பு மீண்டும் மீண்டும் கிழவனைத் தாக்கிக் கொண்டிருக்கிறது. நுளம்பின் வாழ்க்கையின் இடைவெளியை ஈசன் முழுமையாக்கி விட, எமன் சிரிக்கிறான். விரல் நொடிக்கும் நேரம், நுளம்பின் சீவனோடு ஆண்டவனின் சந்நிதானத்தில் நிற்கிறான் எமன்.

போர்க்களத்தில் வெற்றிபெற்ற களிப்பில் கிழவன் அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கிறான். எல்லாம் வல்ல இறைவன், அண்டத்தை அணுப் பிசகாமல் பார்த்துக் கொண்டிருக்கிறான். தேவர்கள் அவனைத் துதித்துக் கொண்டிருக்கிறான். தேவர்கள் அவனைத் துதித்துக் கொண்டிருக்கின்றனர்.

நாடகம் அரங்கேறிவிட்டது.!!!

# சுப்ரி எம். ஷாபி கவிதைகள்

## அல்லாஹ்வை நினைத்து

மதியுள்ள மானிடனாய்
மாண்புடன் மாநிலத்தில்
பிறக்க வைத்தவன் - என்
மதியுயர் மன்னவன்!

மூச்சாலும் பேச்சாலும்
நின்பால் நெருங்கும் எனக்கு
நீ தரும் மெய்ஞானம்
மடை திறந்த வெள்ளமன்றோ!

உன்னை மறந்து நரிகள் போல்
உலக மோகத்தில்
வாழ்பவரைப்
பார்க்கையில்
இதயம் வலிக்குதெனக்கு!

உன் நாமம்
உச்சரிக்கையில்
எனக்குள்
ஆயிரம் ஆனந்தப் பூக்கள்
பூக்கின்றனவே!

உன் அளவற்ற அருள்
நிகரற்ற அன்பு
என்னை வந்தடைகையில்
முழுதாய் மறக்கிறேன்
எல்லாமே!!!

## சிந்தித்து உணர்

அரிது அரிது
மனித நேயத்தோடு
வாழும் நல்ல மனிதரைக்
காண்பது அரிது!

வருது வருது
மனிதன் செய்யும் பாவ
வினையால் இறைவனின் சாபம்
விரைந்து வருது!

உணரு உணரு
நீர்க்குமிழி போன்ற வாழ்க்கை
நிரந்தரமற்றது என்பதை
சிந்தித்து உணரு!

பழகு பழகு
நபிகளார் வாழ்ந்ததுபோல
நல் வாழ்க்கையை
நன்னெறியில் வாழப் பழகு!

கேளு கேளு
உன் தேவைகளை
இறைவனிடம்
இருகரம் ஏந்திக் கேளு!

பேணு பேணு
வீணான பேச்சுக்களைப்
பேசாமல் தவிர்த்து
உன் நாவைப் பேணு!!!

# பூங்காவனம் பற்றி வாசகர்கள்

தமிழ் நாட்டில் அனீஸ் பாத்திமா சகோதரிகள் வெளியிட்ட 'நர்கீஸ்' சஞ்சிகையைத் தொடர்ந்து எமது நாட்டிலிருந்து முஸ்லிம் பெண்களால் வெளிவரும் பூங்காவனம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பொதுவாக எமது பெண்கள் தமிழ் மொழியில் கவிதை, சிறுகதை ஆகியவற்றில் காட்டும் அக்கறையை கட்டுரை, ஆராய்ச்சி, வரலாறு ஆகிய துறைகளில் காட்டுவதில்லை. அதற்காக அவர்களைக் குறைகூற முடியாது. சூழ்நிலைகள் அவ்வாறு அமைந்துள்ளன. இந்த நிலையில் நெருப்பாற்றில் எதிர்நீச்சல் போடும் உங்கள் முயற்சி பாராட்டுதற்குரியது. முயற்சிகள் யாவும் வெற்றி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்!!!

**கலாபூஷணம் அ.லெ.மு. ராசிக்**

பூங்காவனம் 21 ஆவது இதழ் கிடைக்கப்பெற்றது. மிக்க மகிழ்ச்சி. இந்தச் சஞ்சிகையிலுள்ள அனைத்து ஆக்கங்களும் மிகவும் சிறப்பானது. அத்துடன் பூங்காவனத்தின் துணை ஆசிரியர் எழுசுடர் விருது பெற்ற தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா எழுதிய 'நானும் எனது கவிதைகளும்' என்ற தலைப்பில் அமைந்த கவிதை இரசிக்கத்தக்கது. பாராட்டுக்கள்!!!

**பூவெலிகட எம்.எஸ்.எம். சப்ரி**


பூங்காவனம் 21 ஆவது இதழை வாசித்தேன். ஆக்கங்கள் அனைத்தும் நன்றாக உள்ளன. சூசை எட்வேட் சிறுகதை எழுதுவாரே எங்கே காணோம்? ஆசிரியர் தலையங்கத்தை வாசித்தபோது எனக்கு ஒரு பழைய பாடல் ஞாபகத்துக்கு வருகின்றது. எத்தனையோ மேடுபள்ளம் வழியிலே! உன்னை இடற வைத்து தள்ளப் பார்க்கும் குழியிலே! அத்தனையும் தாண்டி காலை முன்வையடா! நீ அஞ்சாமல் கடமையிலே கண்வையடா! சத்தியமே இலட்சியமாய் கொள்ளடா.. நில்லடா!''என்பதுதான் அந்தப் பாடல்வரி. நீங்கள் பூங்காவனம் வெளியிடத் தொடங்கிய காலகட்டத்தில் "பெண்களுக்கு ஏன் இந்த வேலை'' என்று பரிகசித்து உங்கள் முயற்சியை முளையிலேயே கிள்ளிவிடப் பார்த்திருப்பார்கள். ஆயினும் நீங்கள் அந்தத் தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து 21 ஆவது இதழ் வரையும் வெற்றிகரமாகப் பயணித்துவிட்டீர்கள். பூங்காவனம் எழுத்தாளர் குழுவினர், சந்தாதாரர்கள், ஏனைய வாசகர்கள், விளம்பரதாரர்கள் ஆகியோரின் பக்கபலம் உங்களுக்கு இருப்பதால் நீங்கள் அஞ்சாமல் கடமையிலே கண்வைத்து மேலும் பல சாதனைகளைப் புரிவீர்கள். ஆசிரிய பீடத்தினருக்கு எனது வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் தெரிவிக்கின்றேன்.

**கா. தவபாலன் - மொறட்டுவ**

# நூலகப் பூங்கா




நூலின் பெயர் - இது நித்தியம்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - மு. பஷீர்
வெளியீடு - கொடகே பதிப்பகம்
விலை - 350 ரூபாய்



நூலின் பெயர் - வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்ற சவால்கள்
நூலின் வகை - ஆய்வு
நூலாசிரியர் - சுஐப் எம். காசிம்
வெளியீடு - ஜஎம்ஜஎஸ் கிரியேஷன்ஸ்
விலை - 200 ரூபாய்



நூலின் பெயர் - கொட்டியாபுரத்து சிங்கம்
நூலின் வகை - வரலாற்று குறுநாவல்
நூலாசிரியர் - சம்பூர் ஸதீஸ்
வெளியீடு - ஸ்ரீராம் பிரிண்டர்ஸ்
விலை - 250 ரூபாய்




நூலின் பெயர் - விடை தேடி
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - தம்பிலுவில் ஜெகா
வெளியீடு - பொதிகை வெளியீடு
விலை - 240 ரூபாய்




நூலின் பெயர் - அபாயகரமான வார்த்தை
நூலின் வகை - கட்டுரைகள்
நூலாசிரியர் - ஏ.பி.எம். இத்ரிஸ்
வெளியீடு - காகம் பதிப்பகம்
விலை - 300 ரூபாய்



நூலின் பெயர் - சமகாலச் சிங்களச் சிறுகதைகள்
நூலின் வகை - மொழிபெயர்ப்புச் சிறுகதைகள்
தொகுப்பாளர்கள் - மேமன்கவி, கமல் பெரேரா, டெனிசன் பெரேரா
வெளியீடு - தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு



நூலின் பெயர் - திரை விலகும்போது
நூலின் வகை - நாடகங்கள்
நூலாசிரியர் - ஏ.ஆர். திருச்செந்தூரன்
வெளியீடு - சுமதி பதிப்பகம்
விலை - 500 ரூபாய்




நூலின் பெயர் - கருகிய காலத்தின் நாட்குறிப்புகள்
நூலின் வகை - பத்தி எழுத்துக்கள்
நூலாசிரியர் - பிரான்சிஸ் அமலராஜ்
வெளியீடு - யாத்ரா வெளியீடு
விலை - 200 ரூபாய்




நூலின் பெயர் - அவளுக்கு தெரியாத ரகசியம்
நூலின் வகை - நாவல்
நூலாசிரியர் - வெலிவிட ஜரீனா முஸ்தபா
வெளியீடு - எக்மி பதிப்பகம்
விலை - 300 ரூபாய்




நூலின் பெயர் - ஈரம்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - ரிஷான் சரீப்
வெளியீடு - கலாசார அலுவல்கள் திணைக்களம்
விலை - 250 ரூபாய்



நூலின் பெயர் - புல்லாங்குழல்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - திக்வல்லை கமால்
வெளியீடு - கலாசார அலுவல்கள் திணைக்களம்
விலை - 250 ரூபாய்




நூலின் பெயர் - கனவுத் தாரகை
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - திக்வல்லை கமால்
வெளியீடு - கலாசார அலுவல்கள் திணைக்களம்
விலை - 275 ரூபாய்




நூலின் பெயர் - இதயத்தில் வாழ்வோர்
பாகம் 2
நூலின் வகை - ஆய்வு
நூலாசிரியர் - அ.லெ.மு. ராசிக்
வெளியீடு - ரிசான் வெளியீட்டகம்
விலை - 120 ரூபாய்



நூலின் பெயர் - உளி
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - வயலற் சரோஜா
வெளியீடு - அஸ்ரா பதிப்பகம்
விலை - 250 ரூபாய்



நூலின் பெயர் - கும்பிட்ட கையுள்ளும்
கொலை செய்யும் கருவி
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - ஆ.மு.சி. வேலழகன்
வெளியீடு - எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
விலை - 350 ரூபாய்



நூலின் பெயர் - குருதிக் கொழுந்து
நூலின் வகை - மலையகக் கவிதைகள்
நூலாசிரியர் - கவிஞர் பதியதளாவ பாறூக்
வெளியீடு - நூன் அச்சகம்
விலை - 100 ரூபாய்

வெலிகம ரிம்ஸா முஹம்மதின்
'அறுவடைகள்' நூல் விற்பனைக்கு உண்டு



நூலின் விலை - 600/=
தபால் செலவுடன் - 750/=

M.F. Rimza,
No. 21 E, Sri Dharmapala Raod,
Mount Lavinia.

Mobile - 077 5009 222
Email - poetrimza@gmail.com

வங்கித் தொடர்புகளுக்கு,

Bank of Ceylon, Dehiwala Branch, M.F. Rimza, A/C No - 2017143 என்ற இலக்கத்திற்கு 750/= காசு, காசோலைகளை வைப்பிலிடுவோர் பற்றுச் சீட்டுக்களை எமக்கு அனுப்ப வேண்டும். காசுக் கட்டளைகளாயின் (M.F. Rimza - Dehiwala Post Office) என குறிப்பிட்டு அதற்கான பற்றுச் சீட்டுக்களையும் மேலே குறிப்பிட்டுள்ள எமது முகவரிக்கு அனுப்பி இந்தப் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**With Best Compliments From:-**

**With Best Compliments From:-**

FIVE STAR TEXTILES CENTRE

WHOLESALE & RETAIL TEXTILE DEALERS

**No. 95, 2 nd Cross Street, Colombo - 11, Sri Lanka.**
**Tel :- 011 2441810, 2345280, 2441809**
**Fax :- 94 - 1 - 2345184 / 2582453**
**E-mail :- shafeeka@sltnet.lk**

**பூங்காவனம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் வெலிகம ரிம்ஸா முஹம்மத் எழுதி வெளியிட்ட அறுவடைகள் நூல் வெளியீட்டு விழாவின் சில புகைப்படங்கள்.**

















With Best Compliments From...




LUCKYLAND BISCUIT MANUFACTURERS

NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.
TEL - 0094 - 081 - 2420574, 2420217. FAX - 0094 - 081 - 2420740
Email - luckyland@sltnet.lk

9 772012 670007

Designed By - H.F. Rizna